
பூமிக்கொரு
பிளாக்-மெயில்!
ரூ 5/-





வாசக நண்பர்களே, 23885 CODE 95433

வணக்கம். புதிய காமெடி ஹீரோவான ஜாக்கிக்கு ஒதுக்கப்பட்ட இந்த மாதத்தை மாடஸ்டி & கார்வின் ஜோடி ஆக்ரமித்துக் கொண்டுள்ளனர்!

புதிய ஹீரோ என்பதால் கொஞ்சம் Starting trouble! மொழிபெயர்ப்பு; அட்டைப்பட டிசைன் வேலைகள் etc., கொஞ்சம் தாமதமானதால் தயாராகக் காத்திருந்த நமது சாகஸ ஜோடியினை உள்ளே புகுத்திவிட்டேன்!

**"பூமிக்கொரு ப்ளாக்மெயில்"** ஒரு புதுமையான theme ல் உருவாக்கப்பட்ட கதை! வழக்கமான ஆக்ஷன் - ஆனால் வித்தியாசமான climax! படித்துப் பார்த்து விட்டு கட்டாயம் உங்கள் எண்ணங்களை எழுதியனுப்புங்கள்! இன்னொரு விஷயம் ; ஓரிரு மாதங்களுக்கு முந்தைய ஹாட் - லைனில் "அடுத்த தடவை கார்வினுக்கு அட்டைப்படத்தில் முக்கியத்துவம் தரப்படும்" என்று எழுதியிருந்தது நினைவில் உள்ளது! (மறக்க நேரிட்டால் - மறு மாதமே **"வாசகர் ஹாட் - லைன்"** பகுதி மூலம் மண்டையில் குட்டு வைக்கத் தான் பலர் ரெடியாக உள்ளனரே!)

ஆனால் இந்த டிசைன் சில மாதங்களுக்கு முன்னரே போடப்பட்டது என்பதால் - கார்வினுக்கு சான்ஸ் அடுத்த முறைதான்!

சென்ற மாத இதழான **நள்ளிரவு வேட்டைக்கு** (தீபாவளி மலர் - டெக்ஸ் வில்லர்) வழக்கம் போல applause! ஆனால் சில வாசகர்கள் முடிவு கொஞ்சம் 'சப்' பென்று இருந்ததாக feel பண்ணி எழுதியுள்ளனர்! ஆனால் ஆக்ஷனுக்குப் பஞ்சமே இல்லாத கதை என்பது பொதுவான opinion!

புது வருஷத்தை செம ஜாலியாகத் துவங்கிட **"ஒரு கோச் வண்டியின் கதை"** மூலம் காமெடி கௌ-பாய் லக்கி லூக் அடுத்த மாதம் உங்களை சந்திக்க வருகிறார்! முழு வண்ண - முழு நீள - படு அட்டகாசமான கார்டூன் கதை இது! படிக்கத் தவறாதீர்கள்!

தொடரும் 1997ல் - டெக்ஸ் வில்லரின் ரூ. 5/- விலையிலானதொரு சாகஸக் கதை; புது ஹீரோ ஜாக்கி; டெக்ஸ் குழுவின் மி - க - ப் - பெ - ரி - ய ரூ. 25/- விலையிலான சாகஸம்; டிடெக்டிவ் சார்லியின் திகில் த்ரில்லர், இரத்தப் படலம் - பாகம் (7), கேப்டன் பிரின்ஸ் முழு நீள சாகஸம் என்று எக்கச்சக்கமான கதைகள் அட்டகாசமாய் வலம் வரவிருக்கின்றன! ஆண்டவன் அருளுடன் 1997 நிச்சயம் busy ஆனதொரு ஆண்டாக நமக்கு இருக்கப் போவது உறுதி!

அப்புறம் - இதழின் பின் பகுதியிலுள்ள கூப்பனைப் பூர்த்தி செய்து அனுப்பிட வேண்டுகிறேன்! 1996-ல் நமது performance பற்றிய கேள்விகள் அதில் உள்ளன!

இந்த இதழில் இடப்பற்றாக்குறை காரணமாய் **"நரகத்தைப் பார்த்தேன்"** சித்திரத் தொடர்கதையினை சேர்த்திட முடியவில்லை! அடுத்த இதழில் இந்தத் தொடர் நிறைவு பெறுகிறது!

மீண்டும் புத்தாண்டில் - சந்திப்போம்! அதற்கிடையே கிறிஸ்துமஸ் வாழ்த்துக்கள் (அட்வான்ஸாக)!

அன்புடன்,
**S. விஜயன்.**

**லயன் காமிக்ஸ் மாத இதழ் வெளியிடுவோர்:**

பிரகாஷ் பப்ளிஷர்ஸ், 8/D-5, சேர்மன்
P.K.S.A.A. ரோடு, அம்மன் கோவில்பட்டி, சிவகாசி - 626 189.

Phone/Fax : 04562 - 72649
ஆசிரியர் : S. விஜயன்.
Printed at THE VIJAY BOOKS, Sivakasi. Tel.: 21159.

முத்து காமிக்ஸ்

லயன் காமிக்ஸ்

## ஆண்டுச் சந்தா

லயன் காமிக்ஸ் - ஓராண்டுச் சந்தா - ரூ. 75/-

முத்து காமிக்ஸ் - ஓராண்டுச் சந்தா - ரூ. 60/-

ஓராண்டுக்குக் குறைவான சந்தா
ஏற்க இயலாது.

## கைவசம் உள்ள பிரதிகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | ஆவியின் பாதையில் | ரூ. 6-00 | 2 | புயல் படலம் | ரூ. 5-00 |
| 3 | மியாவ் மியாவ் மரணம் | ரூ. 5-00 | 4 | ஒரு மாந்தீரிகனின்கதை | ரூ. 5-00 |
| 5 | தவளை மனிதர்கள் | ரூ. 6-00 | 6 | தங்கக் கல்லறை | ரூ. 7-00 |
| 7 | இரத்த படலம் | ரூ. 6-50 | | | |



மாடஸ்டி & கார்வின் துப்பறியும்
பூமிக்கொரு பிளாக்-மெயில்!
செல்வச் சீமான் டேனியலின் சொகுசுப் படகு "கடல் புறா" பஸிபிக் பெருங்கடலில் நடமாட்டமில்லாத ஒதுக்குப்புறம் ஒன்றில் விரைந்து கொண்டிருந்தது...
காலைப் பனி மூட்டம் விலகியதும் தீவு நம் பார்வையில் படும் ஜான்!... - என்ன... இதயத் துடிப்பு அதிகமாகிறதா?
மை டியர் டேனியல்... விஞ்ஞான ஆராய்ச்சியில் உணர்ச்சி வசப்படுவதென்பது பொருந்தாத அம்சம்...
சென்டினல் தீவில் காணப்படும் பழங்கால உருவச்சிலைகளை ஆராய்வதில் எனக்கு இருக்கும் ஆர்வம் அளப்பரியது... ஆராய்ச்சிக்கான வசதிகளை ஏற்பாடு செய்து கொடுத்திருக்கும் உங்களுடைய தயாளத்திற்கும் எல்லையே கிடையாது...
...கிடைக்கும் தடயங்களை சேகரித்து, ஆராய்ந்து உண்மைகளை பதிவு செய்வேன்... - சென்டினல் வம்சாவளியினரின் சரித்திரத்தை உடனே எழுதித் தரச் சொல்லி வற்புறுத்த மாட்டீர்கள் என்று நம்புகிறேன்.
நிச்சயமாக உங்களிடமிருந்து அதை எதிர்பார்க்க மாட்டோம் புரபஸர்...
ஓ... லாரா - குட்மார்னிங்!


''கடல் புறா'' வின் டைனிங் அறையில் -
எல்லோருக்கும் காலை வணக்கம்... உலகிலேயே முதல்தர செக்ரட்டரி லாரா சௌக்கியமா?
சௌக்கியம்... மிஸ்டர் லேன் - தாங்க் யூ! உலகிலேயே படு மோசமான விஞ்ஞான ஆய்வுக் கட்டுரை எழுத்தாளர் சுகமா?
உங்களுடைய விருந்தாளிகளை அவள் தரக் குறைவாக பேசுவதை எப்படி நீங்கள் சகித்துக் கொள்கிறீர்கள் மிஸ்டர் டேனியல்...?
கண்டித்தால் ஓடிப் போய் விடுவாள் - தாங்காது எனக்கு!
உன்னை அவள் நையாண்டி செய்கிறாள் என்றால் அதற்கு நீயே தான் காரணம்?
நானா...? என்ன புரபஸர்... புதிர் போடுகிறீர்கள்!
சென்டினல் தீவில் காணப்படும் பல்வேறு உருவச் சிலைகள் நெடுங்காலத்திற்கு முன் பிரபஞ்ச வெளியிலிருந்து வந்த அயல் கிரகவாசிகளின் கைவண்ணம் என்று ஆய்வுக் கட்டுரையில் எழுதினால் கேலி செய்ய மாட்டார்களா என்ன!
அப்படி ஒரு யூகம் - புரபஸர்!
அதையே நிஜம் மாதிரி சொல்லி ஏகப்பட்ட பிரதிகளை விற்றுவிட்டார்!
அந்த யூகம் விஞ்ஞான உண்மைகளை அடிப்படையாக கொண்டதில்லையே... இளைஞனே!
நிஜத்தை சொல்லி மக்களை குழப்புவதை வெறுப்பவன் நான்...
என்னது...: எஞ்சினின் இயக்கம் ஓய்ந்துவிட்டதே!



கேப்டன்... ஏதாவது கோளாறா?
இரு எஞ்சின்களும் திடீரென்று ஓய்ந்துவிட்டன மிஸ்டர் டேனியல்... அது ஏனென்று தெரியாத... குழப்பத்தில் மேக் ஆராய்ந்து கொண்டிருக்கிறான்!
செண்டினல் தீவு எவ்வளவு தொலைவில் இருக்கிறது?
ஒரு மைல் தொலைவில்!...
... பாறை முகட்டு அருகே உள்ள வளைகுடா பகுதியில் போய் நங்கூரமிட திட்டமிட்டிருந்தோம்...
புரபஸர்... இந்தாருங்கள் பைனாகுலர் - செண்டினல் தீவை நெருக்கத்தில் பார்க்க ஆர்வம் இருக்குமில்லையா உங்களுக்கு?
...புதிதாக என்ன காணப் போகிறேன்!
ஐந்தாண்டுகளுக்கு முன் லைஸ்மான் எடுத்த வண்ணப் போட்டோக்களை பார்த்திருக்கிறேன்... அத்தோடு, இன்னும் சற்று நேரத்தில் அனைத்தையும் நேரிலேயே நெருக்கத்தில் காணப் போகிறேனே...
மானிடர்களிடம் சராசரியாக காணப்படும் ஆர்வம் உங்களிடம் துளிகூட இல்லையே புரபஸர்...
ஆர்வம் இல்லாமலில்லை லாரா... ஆனால் அது ஒரு உல்லாசப் பயணியின் ஆர்வம் அல்ல - ஒரு விஞ்ஞானியின் ஆர்வம்!



மதியம் ஆகியும் எஞ்சின்களை மீண்டும் உயிர்ப்பிக்க இயலவில்லை...
எஞ்சினிலே கோளாறு ஏற்பட்ட முந்தைய சந்தர்ப்பங்களில் மேக் இப்படி திணறியது கிடையாது... எஞ்சினில் எந்த கோளாறும் இல்லையாம்... அது பழுதுபட்டது ஏன்... அதை சரி செய்வது எப்படி என்று தெரியாமல் விழிக்கிறான்...
திடீரென்று
ஹலோ... அங்கே டெக்கில் என்ன அமளி?
லாரா... என்ன ஆயிற்று?
அது... அது... ஓசைப் படாமல் வந்தது... பெரியது...வட்டமாக... உலோகத்தால் ஆனமாதிரி பளபளத்துக் கொண்டு... செண்டினல் தீவின் மேட்டுப் பகுதியில் தரையிறங்கியது
லாரா... என்ன உளறுகிறாய்... சித்தம் பேதலித்துவிட்டதா உனக்கு?
இல்லை - நிஜம்! விண்ணிலிருந்து இறங்கி வந்தது...
கேப்டன்... நீங்களுமா பார்த்தீர்கள்!
அவள் கூற்று உண்மைதான்! நாங்களும் பார்த்தோம் - அந்த பறக்கும் பொருளை!
ஆமாம்...! ரொம்ப பெரியது... விட்டம் நூற்றைம்பது அடிக்குக் குறையாது... நீங்களே வந்து பாருங்கள்!



தட்டையான முகட்டின் மீது அந்த உலோகப் பொருள் தரையிறங்கியிருந்தது.
அடடே... நம்ப முடியவில்லையே
லேன்தான் முதலில் பார்த்துச் சொன்னார்...மேல்திசை யிலிருந்து வந்தது...
...அது வந்து வட்டமடித்து தரையிறங்கியதை நாங்கள் எல்லோருமே பார்த்தோம்!
ஓசை ஏதுமில்லை... புகைத் தாரையுமில்லை - அப்படித்தானே மேக்?
ஆமாம்! ஜெட்டோ, புரபெல்லரோ இன்றி பறந்து வந்து தரையிறங்கியது ஸார்!
இந்த பறக்கும் தட்டு பற்றி விஞ்ஞானி நீ கூறும் கருத்து என்ன ஜான்?
ஒட்டு மொத்த மனப்பிரமை - அல்லது ஒருவகை பித்தலாட்டம்!
ஆனால் ஐந்து பேர் சேர்ந்து பார்த்தோமே - அது வந்து இறங்கியதை! இப்படியொரு வாகனம் சாத்தியமா?
ஒரு பேச்சுக்குக்கூட ஒத்துக் கொள்ள முடியாது!
அப்படியானால் அந்த பித்தலாட்டக்காரனுக்கு இப்படியொரு புதிரான வாகனத்தை உருவாக்க சாத்தியப்பட்டது எப்படி? அந்த பிரமைத் தோற்றத்தை பைனாகுலர் உருப்பெருக்கிக் காட்டுகிறதா என்றுதான் பார்ப்போமே!



அதன் மேற்பகுதியில் சிறு திறப்பு இருக்கிற மாதிரி தோன்றுகிறது
பைனாகுலரை தன் கண் அருகே கொண்டு போன டேனியல் திடீரென்று பெருங்குரலில் அலறியவாறு அதை நழுவவிட்டார்...
ஆவ்... பழுக்க காய்ச்சிய இரும்பாக சுடுகிறதே!
ஆ ஆ ஆ
கைகள் அதிர்ந்தனவே தவிர சூடுபட்ட தடயமே இல்லையே எப்படி?
மிஸ்டர் டேனியல்... லென்ஸ்கள் உருகி வழிந்து விட்டன பாருங்கள்!
இதன் கட்டமைப்பில் புறத்தாக்குதல் ஏற்பட்டிருந்தால் மட்டுமே இப்படியொரு விளைவு சாத்தியம்!
லேசர் கதிர் வீச்சு?
லென்ஸ்கள் நாசமாகிவிட்டன... வேறு சேதமில்லை... உங்களுக்கும் ஊறு ஏற்படவில்லை... இப்படி துல்லியமான விளைவுகளை ஏற்படுத்தும் டெக்னாலஜி இன்னமும் நாம் அறியாத ஒன்று!
ஒட்டு மொத்த மனப்பிரமை எவ்வளவு நேரம் நீடிக்கும் புரபஸர் - அதில் இவ்வளவு விபரங்கள் தெரியும் சாத்தியக்கூறு உண்டா?
அதே கேள்வியைத்தான் என்னையே நான் கேட்டுக் கொண்டிருக்கிறேன் லேன்...



பறக்கும் தட்டு, அயல்கிரக பச்சை நிற குள்ளர்கள் கதையை நேரில் கண்டாலன்றி நான் நம்ப மாட்டேன்... கடல் விமானத்தை கிளப்ப ஏற்பாடு செய்யுங்கள் கேப்டன்...
நெருங்கிப் போய் ஆராய்வோம்
படு ஆபத்தான முயற்சி!
அதற்காக இதை இப்படியே விட்டு விடவா முடியும்? மீண்டும் பைனாகுலரை பயன்படுத்தினால் பார்வை பறி போய்விடும் அபாயம் ஏற்படலாம்
கடல் விமானம் மேலெழும்பியது...
அயல்கிரகவாசிகள் பூமிக்கு வரும் கற்பனை எனக்கு கிளர்ச்சியூட்டுவது உண்டு... அது நிஜமாகி வரும்போது வித்தியாசமான உணர்ச்சிகள் தலை தூக்குகின்றன...
விஞ்ஞானியான நீங்கள் பறக்கும் தட்டு சங்கதியை ஏற்றுக் கொள்ள மாட்டீர்கள் அல்லவா?
இன்னமும் எந்த முடிவுக்கும் வரமுடியவில்லை...!
என் புலன்கள் கண்டு உணர்ந்து சொல்லும் உண்மைகளை எப்படி நான் மறுக்க முடியும் லாரா? - ஆனாலும் நான் இன்னமும் ஒரு முடிவுக்கும் வரவில்லை,



கடல் விமானம் தீவை சமீபித்த போது -
ஐயோ... விமானத்தின் எஞ்சின் ஓய்ந்து போய்விட்டதே
கடவுளே!
தரையிறங்கும் வேகத்தில் இருப்பதால் தப்பிவிடும்... மேலும் பெல் ஒரு திறமையான பைலட்...
...ஆங் - சமநிலைக்கு வந்துவிட்டது...! அப்பாடா - நீரில் இறக்கி நிலைப்படுத்தி விட்டான்!
சொகுசுப் படகுக்கு ஏற்றப்பட்ட கடல் விமானத்தை தீவிரமாக சோதித்தார்கள்...
டேனியல்... அனைத்து மின் அமைப்பும் தீய்ந்து போயிருக்கிறது. உங்களுடைய ரேடியோ டெலிபோனில் லண்டனோடு தொடர்பு கொள்ள முடியுமா பாருங்கள்...
சில மணி நேரத்திற்குப் பின் இலண்டனில் உள்ள கார்வினின் நதிக்கரை காட்டேஜின் விளையாட்டு அறையில்
ஓ.கே... இன்னும் வேகமாக வாருங்கள் வில்லி - என்னை நோக்கி
மிஸ்டர் கார்வின் - ஸர் ஜெரால்டு டார்ரண்ட் உங்களைக் காண வந்திருக்கிறார்... ரொம்ப அவசரமாம்!


ஹலோ... ஸார் - வாராந்தர ஓய்வுக்காக வந்திருக்கிறீர்களா?
இல்லை... இந்த இடம் பத்திரமானதுதானா?
ஆமாம் - ஏன்?
நான் சொல்லப் போவது எனக்கும் பிரதம மந்திரிக்கு மட்டுமே தெரிந்த இரகசியம்
மாடஸ்டி... அந்த பாரை விட்டிறங்கி வந்து நான் சொல்லப் போவதை நீயும் கேள்!
விஷயம் நல்லதோ கெட்டதோ... ஆனால் நிஜம் - உலக சரித்திரத்தில் இதுவரை இப்படியொரு புதிரான சம்பவம் நிகழ்ந்ததில்லை!
பகுத்தறிவு உடைய அயல்கிரக ஜந்துக்கள் நம் பூமியில் வந்து இறங்கியிருப்பதாக நம்பத் தகுந்த நபர்களிடமிருந்து தகவல் வந்திருக்கிறது...
டி.வி. சீரியலில் வரும் காட்சி மாதிரி தோன்றினாலும் வந்து இறங்கியது நிஜமாகவே ஒரு பறக்கும் தட்டு போன்றது என்று சொல்கிறார்கள்
ஏன் தான் இது வரைக்கும் 'பறக்கும் சதுரமோ' ஒரு 'பறக்கும் முக்கோணமோ' யார் கண்ணிலும் படமாட்டேன்கிறது!


அயல்கிரகவாசிகள் வந்து இறங்கியிருக்கிறார்கள் என்கிறேன் - அலட்டிக் கொள்ளவே இல்லையே?
அப்படியில்லை... சற்று வியப்பாகத்தான் இருக்கிறது!
இந்த பிரபஞ்சத்தில் நாம் மட்டும்தான் இருக்கிறோம் என்ற எண்ணம் சரியான்தாக இருக்க முடியாது... இல்லையா?
இங்கே வந்து சேர்ந்திருக்கிறார்கள் என்றால் புத்திசாலிகளாகத் தான் இருப்பார்கள்...
ஆடிய களைப்பு தீர ஒரு குளியல் போடப் போகிறேன்...
ஆனாலும் நாம் உரையாடலை தொடரலாம்...
பஸிபிக்கில் உள்ள சென்டினல் தீவு பற்றியும் அங்கே உள்ள புராதன உருவச் சிலைகள் பற்றியும் கேள்விப்பட்டிருப்பீர்களே!
அவற்றை பார்த்திருக்கிறோம் ஸர் ஜெரால்டு!
ரொம்ப நல்லது! டேனியல் பற்றி கேள்விப்பட்டிருக்கிறீர்களா?
செல்வச் சீமான்... பணம் கோடி கோடியாக கொட்டிக்கிடக்கிறது அவரிடம்...
தங்கமானவர்... நல்ல காரியங்களுக்காக பணத்தை வாரி இறைக்க தயங்கவே மாட்டார்...



டேனியல் இப்போது ஒரு விஞ்ஞான ஆராய்ச்சி காரணமாக புரபஸர் ஜான் கார்ஸனோடு செண்டினல் தீவுக்கு போயிருக்கிறார்.
அரசின் விஞ்ஞானத்துறை ஆலோசகர் -
ஆமாம்! என் நெடுநாளைய நண்பரும் கூட... அவர்களோடு டேனியலின் செகரட்டரி லாரா... பிரபல விஞ்ஞான கட்டுரை எழுத்தாளர் லேன் மற்றும் பத்து ஊழியர்கள் இருக்கிறார்கள் - பட்டியல்... இதோ!
பறக்கும் தட்டை முதலில் கண்டது யார்?
ஐவர்...! இன்னமும் அது நேரடியாக காணும் வகையில் நின்று கொண்டிருக்கிறதாம்!
டார்ரண்ட் விஷயத்தை விளக்கலானார்...
முதலில் படகின் எஞ்சின்கள் புதிரான முறையில் ஓய்ந்து போயின... அடுத்து பறக்கும் தட்டு வந்து இறங்கியது... ...பின்னர் டேனியல் பைனாகுலர் மூலம் அதை பார்க்க முயன்றபோது ஏதோ ஒன்று லென்ஸை உருகச் செய்துவிட்டது... அதையடுத்து, கடல் விமானம் பறந்தபோது ஏதோ ஒன்று மின்சார அமைப்பை தீய்ந்துபோகச் செய்துவிட்டது.
நம்பத்தகுந்த சாட்சிகள் யாரேனும் உண்டா?
அந்தப் பட்டியலில் இருப்பவர்கள் யாரும் முட்டாள்களோ மூடர்களோ அல்ல... தலை சிறந்த விஞ்ஞானி ஜான் கார்ஸனும் அங்கே இருக்கிறார்...


பறக்கும் தட்டு விவகாரத்தை நம்பிவிட்டதால்தான் புரபஸர் உங்களுக்கு ரேடியோ - டெலிபோன் மூலம் செய்தி அனுப்பினாரா?
அலட்சியப் படுத்த முடியாததால் என்று வைத்துக் கொள்வோமே!
நாங்கள் இருவருமே கிரேக்க மொழியில் புலமை பெற்றவர்கள் என்பதால் எங்கள் ரேடியோ சம்பாஷனையை யாரும் ஒட்டுக் கேட்டுப் புரிந்திருக்க முடியாது!
அடுத்து - ?
சற்று நேரத்தில் நான் சென்டினல் தீவுக்கு புறப்படுகிறேன்... நீயும் வில்லியும் என்னோடு வரவேண்டும்!
இதோ - நொடியில் குளித்துவிட்டு வந்துவிடுகிறேன்
சற்றைக்கெல்லாம்
கார் ரெடி... இளவரசி!
இதோ... கிளம்பிவிட்டேன்! எப்படி அங்கே போகப் போகிறோம்?
விமானப்படை விமானத்தில் டோங்கா சென்று அங்கிருந்து பறக்கும் படகு ஒன்றில் பயணத்தை தொடரப்போகிறோம்
பறக்கும் தட்டு - நிஜமாக இருக்குமா?
அது என்னவாக இருக்கும் என்று சொல்லத் தெரியவில்லை வில்லி... நேரில் பார்த்து ஒரு முடிவுக்கு வருவோமே...


இரவில் - விசேட விமானத்தில் பயணம்...
இந்த விவகாரம் பற்றி தெரிவித்தபோது பிரதம மந்திரி என்ன சொன்னார் ஸார்?
அப்படி ஒருவேளை அயல் கிரகவாசிகள் நிஜமாகவே வந்து சேர்ந்திருந்தார்களேயானால் பூமியின் இயக்கம் அடியோடு மாறிப் போய்விடும் என்று கவலை தெரிவித்தார்.
விவகாரத்தை என் இஷ்டப்படி கையாள முழு சுதந்திரமும் அதிகாரமும் வழங்கியிருக்கிறார்.
ஓகோ!
பாய, பித்தலாட்டமாக இருந்தால் அதற்கு ஒரு முடிவுகட்ட வேண்டும்... விஷயம் நிஜமாக இருந்துவிட்டால் அந்த அயல்கிரகவாசிகளோடு தொடர்பு கொள்ள வேண்டும் என்பது உத்தரவு...
நிபுணர்களை கூட்டிச் செல்லாமல் நீங்கள் எங்களை தேர்ந்தெடுத்தது ஏன் என்று தெரிந்து கொள்ளலாமா?
நிபுணர்கள் என்றால்? எந்த வகையில்?
எந்த ஒரு வித்தியாசமான சூழ்நிலையிலும், நெருக்கடியிலும் நிலைமையை சமயோசிதமாக கையாளத் தெரிந்த நிபுணர்கள் எனக்குத் தெரிந்தவரை நீங்கள் இருவரும்தான்!


புரபஸர் ஜான் கார்ஸன் எப்படிப்பட்டவர்?
நடைமுறைவாதி... உணர்ச்சி வசப்படாதவர்... நம்பகமானவர்... சர்வதேசப் புகழ் பெற்றவர்...
பறக்கும் தட்டு விவகாரம் நிஜம் என்று அவர் நம்புகிறாரா?
நாம் அறிந்த விஞ்ஞானத்தால் விளக்கம் சொல்ல முடியாத புதிராக இருக்கிறது என்று சொன்னார்!
அவர் அப்படிச் சொன்னால் ஒன்று அது நிஜமாக இருக்கும் - அல்லது அவருக்கே மனக் குழப்பத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும் அந்தச் சம்பவம்.
எனக்கு தூக்கம் வருகிறது ... குட் நைட்!
நிஜமாகவே அவர்கள் அயல்கிரகவாசிகளாக இருந்துவிட்டால்..?
நிச்சயம் நரமாமிசம் சாப்பிடும் ராட்சஸ பல்லிகளாக இருக்க மாட்டார்கள்... நம்மைப் போல் ஆனால் சற்று மாறுபட்ட தோற்றத்தில் இருக்கக்கூடும்!
பிரபஞ்சத்தில் வேறு ஜீவராசிகள் இருப்பது உண்மையானால் அதுவே உலகின் வாழ்க்கை முறையை திசை திருப்பி விட்டுவிடுமே!
அந்த திருப்பம் நல்லதற்காகத்தான் இருக்கும்!
... அவர்களால் எந்த கேடும் வராது



விடியற்காலை வேளை - சென்டினல் தீவில்...
அவசரப்பட்டு விட்டீர்கள் டேனியல்... டார்ரண்ட் வந்து சேரும் வரை பொறுமையோடு இருந்திருக்கலாம்
அதெப்படி? அந்த பறக்கும் தட்டு எந்த வினாடியிலும் மறைந்து போகலாம்... கிடைத்த அரிய வாய்ப்பு கை நழுவிப் போய்விடுமே!
நேற்றிரவு படகில் சென்று கரையேறிய இருவரின் பாதுகாப்புக்கு எந்த உத்தரவாதமும் கிடையாது...
பெல்லும், ரேபர்னும் தாமாகவே முன்வந்தார்கள்... தீவின் மத்திய பகுதிக்குச் சென்று பின்னர் முகட்டிலேறி தாங்கள் கண்டதை ரேடியா மூலம் நமக்கு தெரிவிப்பதை தவிர வேறு எந்த முயற்சியிலும் ஈடுபடப் போவதில்லை...
யாருடைய குறுக்கீடும் இல்லாதிருந்தால்!
அந்த தீவில் யாரேனும் இருக்கும் பட்சத்தில் அங்கே நான்தான் முதல் ஆளாக சென்றிருக்க வேண்டும்.
இல்லை ஜான்... என்னோடு இருக்கும் ஒரே விஞ்ஞானியான உன்னை ஆபத்தோடு விளையாட அனுமதிக்க முடியாது...
விவகாரம் நிஜமாக இருந்தால் அதை உலகுக்கு அதிகார பூர்வமாக அறிவிக்க உன்னை விட்டால் இங்கே வேறு யார் இருக்கிறார்கள்?



செய்தி பரவினால் ஏகப்பட்ட விஞ்ஞானிகள் இங்கே வந்து குவிந்து விடுவார்கள்
வா... போய் செய்தி ஏதாவது வந்ததா என்று கேட்போம் !
செய்தி ஏதேனும் வந்ததா கேப்டன்?
இல்லை ஸார்... நீங்கள்தான் ரேபர்ஸிடம் அவசியப்பட்டாலன்றி ரேடியோவை...
பொறுங்கள்...
ரிஸீவரில் ஒரு குரல் கிசுகிசுத்தது...
ரேபர்ன் பேசுகிறேன்... மத்திய பகுதிக்கு பாதி வழியில் இருக்கிறோம் நாங்கள்... இரு உருவங்கள் கீழே இறங்கி வருவது தெரிகிறது... அவர்கள் வேடமணிந்த மனிதர்களைப் போல்...
இல்லை... இல்லை - அவர்கள் மனிதர்கள் இல்லை...
பதற்றமான அந்தக் குரல் மேலே தொடர்ந்தது...
மனிதர்கள் மாதிரி... ஆனால் மனிதர்கள் அல்ல... அவர்களை படம்பிடிக்க பெல் முயற்சிக்கிறான் - ஆ..வ்வ்... கேமரா சேதமடைந்து விட்டது...
பெல்... உனக்கு ஒன்றும் ஆகவில்லையே
அ... அ.. அப்படித்தான் நினைக்கிறேன்


ரேபர்ன்... அந்த ஜந்துக்களைப் பற்றி விரிவாகச் சொல்
நாங்கள் பார்த்த ஜந்துக்களுக்கு இரண்டு நீண்ட கால்கள்... இரு முட்டிகளோடு - உயரம் ஏழடி இருக்கலாம்... நீண்ட முகங்கள்... நாய்களைப் போன்ற... நீண்ட முகவாய்...
புரபஸர்...
அவை - சென்டினலோடு ஒத்துப் போகின்றன...
...முகவாயின் மத்தியில் சிறு கீற்று... மூன்றாவது விழியாக இருக்கலாம்... செதில் போன்ற உடை அணிந்திருக்கின்றன... ஆயுதம் எதுவும் கைவசம் இல்லை... ஒவ்வொரு கையிலும் எதிரெதிர் திசையில் நீண்ட கட்டை விரல்கள்...
ரேபர்னின் குரலில் விரைவு தெரிந்தது...
நின்றுவிட்டன... என்னை உறுத்துப் பார்க்கின்றன... பெல் மயங்கிவிட்டான்... என் தலைக்குள்ளேயும் சூறாவளி மாதிரி ஏதோ குழப்புகிறது...


ஏதோ சொல்கின்றன... ஆ... இல்லை - என் தலைக்குள்ளேயே கேட்கிறது... டெலிபதி!
அவர்கள் என்னை துன்புறுத்த மாட்டார்களாம்... அவர்களோடு நான் வரவேண்டுமாம்... பயப்பட தேவையில்லையாம்... பூமியை பற்றி ஆராயவே கூப்பிடுகிறார்களாம்...
நம் மனித குலத்தைப் பற்றிப் படிக்கப் போகிறார்களாம்...! நமக்கு எந்தப் பிரச்சனையும் பண்ண மாட்டார்களாம்!
குரல் தேய்ந்து மறைந்துவிட்டது... ரேடியோ மௌனமாகிப் போனது.
மனித உருவில் இருக்கும் அயல் கிரகவாசிகள் ரேபர்னையும் பெல்லையும் டெலிபதி சக்தி மூலம் வசீகரித்து ஆராய்ச்சிக்களாக உடனழைத்துப் போகிறார்கள்... போலிருக்கிறது.
போலிருக்கிறது என்றால்?
ரேபர்னின் மனத்தில் ஹிப்னாட்டிஸ உத்தரவு பதிவு செய்யப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கிறேன்
இங்கே நாம் அத்தனை பேரும் ஒட்டு மொத்தமாக ஹிப்னாட்டிஸ வசியத்தில் சிக்கியிருந்தாலொழிய இந்த சம்பவங்கள் எதுவுமே சாத்தியமில்லை! நிச்சயம் நான் வசியத்தில் இல்லை என்பது எனக்குத் தெரியும்!



பறக்கும் படகு ஒன்று 'கடல்புறா'வை நெருங்கி வந்து நீரில் இறங்கியது...
உங்கள் உபயோகத்திற்கு அவர்கள் ஒரு படகை இறக்கியிருக்கிறார்கள் ஸார்...
உனக்கிடப்பட்ட உத்தரவு நினைவிருக்கிறதல்லவா?
யெஸ் ஸார்... எக்காரணம் கொண்டும் சென்டினல் தீவு மீது பறக்கக் கூடாது... டோங்காவுக்கு திரும்பிச் சென்று அங்கே காத்திருக்க வேண்டும்...
ஓ.கே! மொத்த விவகாரமும் பரம இரகசியமானது - நினைவிருக்கட்டும்!
'கடல் புறா'வில் அறிமுகம் நடந்து முடிந்த பின்னர் -
கூடவே சில விஞ்ஞானிகளை அழைத்து வருவீர்கள் என்று எதிர்பார்த்தேன் ஜெரால்டு.
விஞ்ஞானிகளை விட பரந்த அனுபவசாலிகளான அவர்கள்தான் பொருத்தம் என்று நான் தீர்மானித்தேன்...
பறக்கும் தட்டு இன்னமும் அங்கேயேதான் இருக்கிறதா -
ஆமாம்... அயங்கிரவாசிகளோடு!
அங்கே போன இரண்டு நபர்கள் அவர்களை பார்த்திருக்கிறார்கள்... அவர்களுடைய பேச்சை டேப்பில் பதிவு செய்திருக்கிறேன்...


டேப் பலமுறை ஓடவிடப்பட்டது...
அதாவது அந்த அயல்கிரகவாசிகளின் தோற்றம் சென்டினல் மாதிரி இருக்கிறது - இல்லையா?
மண்டை மகாப் பெரிசு! எக்கச்சக்க மூளை இருக்கணும்!
ஆமாம்... முக்கியமான தகவல் அது!
இருவர் காணாமல் போனது முக்கியத்துவம் தரப்பட வேண்டிய விஷயம் அல்லவா?
இருக்கலாம்... ஆனால்...
...இப்போது நிலவும் சூழலில் அயல்கிரகவாசிகளின் வரவு பற்றிய உண்மைகளை முழுவதுமாக சேகரிக்கும் பணியே தலையாய முக்கியத்துவம் பெறும்!
அவர்களைப் பற்றி உங்களுக்கு அக்கறை இல்லையா?
அவர்களை வசப்படுத்தி வைத்திருப்பதிலிருந்தே எதிரிகள் சமர்த்தர்கள் என்பது உறுதியாகிறது... அவர்களோடு ஒரு மோதல் என்பது யோசித்து செய்ய வேண்டிய காரியம்!
ஒரு விஞ்ஞானி என்ற முறையில் உங்களுடைய கருத்து என்ன ஜான்?
மனித ஜாடையில் இருக்கும் எந்த ஜீவராசியும் சூரிய மண்டலங்களுக்கிடையே இஷ்டப்படி பயணம் செய்ய இயலுமா...


...என்று கேட்டால் இல்லை என்பதே என் பதிலாக இருக்கும்... ஆனால் இப்போது நிதரிசனமாக கண்ட காட்சிக்கு ஒரு பொருத்தமான விளக்கம் சொல்லவும் இயலவில்லை...
அயல் கிரகவாசிகளின் வரவு பற்றி உலக மக்களுக்கு உடனடியாக தெரிவிக்க வேண்டியது அவசியம்... அத்தோடு, அவர்களோடு தொடர்பு கொள்ள முயற்சியும் மேற்கொள்ளப்பட வேண்டும்
ஜான் ஏற்கனவே ஒரு முயற்சி நடந்ததே!
ரேபர்னும், பெல்லும் திரும்பி வரும் வரை நாம் மேற்கொண்டு எந்த நடவடிக்கையும் மேற்கொள்வது உசிதமல்ல...
மாடஸ்டி ?
நடந்த சம்பவங்களை திரும்பத் திரும்ப கோர்வையாக சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று கருதுகிறேன்!
24 மணி நேரம் கழித்து -
பறக்கும் தட்டு இறங்கியதை ஐவர் பார்த்திருக்கிறார்கள்... பைனாகுலர் புதிரான முறையில் சிதைந்து போனதை எட்டுப் பேர் பார்த்திருக்கிறார்கள்... கடல் விமானத்தின் மின் அமைப்பை தீய்ந்து போகச் செய்தது எது என்பது தெரியவேயில்லை...


...கப்பலின் எஞ்சின்கள் ஓய்ந்து போன காரணமும் தெரியவில்லை. கார்ஸனின் நேர்மை நூற்றுக்கு நூறு நம்பகமானது... இருவர் தீவுக்கு அனுப்பப்பட்டதற்கு அனைவருமே சாட்சிகள்... அவர்களுடைய அறிக்கையைத்தான் நாமே டேப்பில் கேட்டோமே!
பித்தலாட்டம் சாத்தியமில்லாத ஒன்று... அனைவருக்கும் மாயப் பிரமை என்பது நடவாத காரியம்!
எனவே, அயல்கிரகவாசிகளின் வரவு - நிஜம்...! அப்படித்தானே!
இந்த தீர்மானத்தை நான் பிரதம மந்திரிக்கு உடனே தெரிவித்தாக வேண்டும்... அது பற்றி எப்போது அறிக்கை வெளியிட வேண்டும் என்பதை அவரே தீர்மானிக்கட்டும்...
ஜனங்களுக்கு நிச்சயம் அது அதிர்ச்சியூட்டும் செய்தியாக இருக்கும்!
அயல்கிரகவாசிகளோடு தொடர்பு கொள்வது பற்றியும் அடுத்து நான் முயற்சிக்க வேண்டும்...
... அந்த முயற்சி வெற்றியாகவோ, தோல்வியாகவோ முற்றுப் பெறும் வரை பிரதமர் செய்தியை வெளியிட மாட்டார் என்பது என் கணிப்பு
ஸர் ஜெரால்டு... அடுத்த 48 மணி நேரத்திற்கு நீங்கள் எந்த நடவடிக்கையிலும் இறங்க வேண்டாம்
ஏன்... ஏன் அப்படி சொல்கிறாய் மாடஸ்டி?


உள்ளுணர்வு சொல்கிறது அப்படி... ஒருவேளை இடையில் ரேபர்னும், பெல்லும் கூடுதல் தகவல்களோடு திரும்பி வந்து சேரலாமில்லையா ?
கண்ணடிக்கிறாள்! - அவர் காதில் பூ சுற்றுகிறாள் என்று நினைக்கிறேன்
ஓ.கே.!
'கடல் பறவை'யில் - இரவில்...
வில்லி...?
விழித்துக் கொண்டுதான் இருக்கிறேன் இளவரசி... நீ நிச்சயம் வருவாய் என்று எதிர்பார்த்தேன்
மிகப்பெரிய விவகாரம் இது வில்லி... சிறு பிழையும் வரக்கூடாது. நமக்குத் தெரிந்ததெல்லாம் பிறர் பார்த்துச் சொன்ன விபரங்கள் தான்... நம்பக மானவர்கள் தான் என்றாலும் அவர்கள் கூற்றை அப்படியே ஏற்றுக் கொள்ள என் மனம் சம்மதிக்கவில்லை...
வெளியே போகத் தயாராக டிரஸ் செய்து வந்திருக்கிற மாதிரி தெரிகிறது!
ஆமாம்... நானே நேரில் சென்று உண்மை எது என்று கண்டறியப் போகிறேன்
கடல் விமானத்தில் உள்ள மிதவையை பயன்படுத்தி தீவில் மறுபுறம் கரையேறப் போகிறேன்!
நான்?


நீங்கள் தான் தீர்மானிக்க வேண்டும் வில்லி... கார்ஸனின் கூற்று நிஜமாக இருந்துவிட்டால் டெலிபதி சக்தி வாய்ந்த ஜந்துக்கள் நம் மூளையையும் உருட்டிப் பார்க்கக் கூடும்!
ஹெ... ஹெ... என் மூளையை உருட்டிப் பார்த்தால் வில்லங்கமாய் ஏதாவது சிக்கும் - பயல்கள் திணறிப் போவார்கள் இளவரசி!
அப்படியானால் டிரஸ் பண்ணிக் கொண்டு உடனே கிளம்புங்கள்.
இரண்டு மணி நேரம் மிதவையில் பயணம் செய்து தீவின் மறுபக்க கரையை சென்றடைந்தார்கள் மாடஸ்டியும், கார்வினும்
விடிய ஒருமணி நேரம் இருக்கிறது
நாம் காணாமல் போனது 'கடல் புறா' வில் இருப்பவர்களுக்கு விரைவிலேயே தெரிந்துவிடும் ...
டார்ரண்ட்டுக்கு குறிப்பு எழுதி வைத்துவிட்டு வந்திருக்கிறேன். வெளிச்சம் பரவிய பிறகு நடக்கத் தொடங்குவோம் வில்லி - புது இடத்தில் என்ன ஆபத்து இருக்குமோ... இருட்டில் போவது சரியாகாது !
இந்த விவகாரத்தில் நிச்சயம் வில்லங்கம் உள்ளது இளவரசி!
மற்ற விவகாரம் போன்றதல்ல இது... ஆனால் இந்த அனுபவத்தை இழக்கவும் நான் தயாரில்லை...


இளவரசி - அங்கே நிஜமாகவே வெளிகிரகவாசிகள் இருந்து, நம்மைப் பிடித்துக் கொண்டு போய் அவர்கள் கிரகத்து Zoo-வில் அடைத்துப் போட்டிட நேர்ந்தால் கூட...
...நாம் இத்தனை காலம் இணைந்து இருந்ததை நான் ரொம்பவும் ரசித்தேன் என்று சொல்லிக் கொள்கிறேன்!
இந்த நீளமான வசனம் பேசுவதெல்லாம் ஒத்துவராத சங்கதி வந்த வேலையைப் பார்ப்போமே!
அப்படியில்லை... - இதுவரை நம் எதிரிகள் சாதாரண மானிடர்கள். ஆனால் இன்று...?
போய்த்தான் பார்த்துவிடுவோமே!
பொழுது விடிந்த போது –
டார்ரண்ட்! கடல் - விமான மிதவையைக் காணோம்... அத்தோடு நீங்கள் அழைத்து வந்த ஜோடியும் கண்ணில் படவில்லை
தீவுக்கு செல்வதாக எனக்கு குறிப்பு எழுதி வைத்து விட்டுப் போயிருக்கிறார்கள்...
மரணத்தோடு விளையாடுகிறோம் என்று புரியவில்லையா அவர்களுக்கு?
இது அவர்களுக்கு வாடிக்கை... ஜான்! எடுத்துச் சொன்னாலும் கேட்கிற ரகம் இல்லை!



மிஸ்டர் டேனியல்... ஏதாவது அசம்பாவிதமா?
டார்ரண்ட் அழைத்து வந்த ஜோடி இரவோடிரவாக தீவுக்குப் போயிருக்கிறது...
ஐயோ... இப்போது என்ன செய்யப் போகிறீர்கள்?
காத்திருப்பதை தவிர வேறு வழியில்லை
மாடஸ்டியும் கார்வினும் சென்டினல் முகட்டை நோக்கி நடந்தார்கள்
அங்கே பார்... பெல் எடுத்து வந்த சினி-கேமரா
லென்ஸ் கெட்டுப் போயிருக்கிறது... ஆனால் இது சம்பவிக்கு முன் அவர்கள் பிடித்த படங்கள் உள்ளே இருக்கக்கூடும்.
கேமராவை எடுத்த இடத்திலேயே வையுங்கள் வில்லி...
ஏன்?
நாம் ஒருவேளை அயல் கிரகத்துக்கு கடத்தப் பட்டால் வேறு எவரேனும் இதை எடுத்து ஆராயட்டுமே!
ஹ்ம்ம்... எந்த கிரகத்து மியூசியத்தில் என்னை அடைத்து வைக்கப் போகிறான்களோ?


கிரகம் விட்டு கிரகம் செல்லும் ஆற்றலும், டெலிபதி சக்தியும் படைத்த ஜீவராசிகளிடம் உயர்ந்த சிந்தனா சக்தியும் இருக்கும் - காரணமின்றி யாரையும் பலி கொள்ளமாட்டார்கள்
அதாவது - அவர்கள் நிஜமாகவே அயல் கிரகவாசிகளாக இருக்கும் பட்சத்தில்...!
வேறு எப்படி இருகக முடியும்?
இளவரசி...
ஆமாம்... எனக்கும் தெரிகிறது!
ரேடியோ மூலம் ரேபர்ன் சொன்ன அடையாளத்தோடு ஒத்துப் போகிறது... ஆனால் இன்னமும் டெலிபதி செய்தி எதுவும் என்னை எட்டவில்லை -
என்னையும் தான்! ஆனாலும் சமாதான யோசனைகளையே இப்போது நினைத்து வருகிறேன்!
நெருங்கிச் செல்வோம்... பகுத்தறிவுள்ள ஜீவனாக இருந்தால் இப்படி செல்வது நட்புறவோடு என்று புரிந்து கொள்ளும்.


அங்கே -
அயல்கிரகவாசிகள் வந்து இறங்கியிருப்பது நிஜம்தான் என்று எப்போது நீங்கள் பிரதமருக்கு செய்தியனுப்புவீர்கள் ஜெரால்டு?
வில்லியும் மாடஸ்டியும் திரும்பி வந்து அதை ஊர்ஜிதப்படுத்தியதும்...
...அல்லது நாளை மதியம் வரை அவர்கள் திரும்பி வந்து சேராத பட்சத்தில்!
ஆபத்தோடு விளையாடும் அசடுகள் அவர்கள்!
அந்த ஜந்துக்களுக்கு இவர்கள் கோபமூட்டினால் நமக்கு என்ன ஊறு நேருமோ...
அப்படியெல்லாம் நேரிடாது அவர்கள் நிராயுதபாணிகளாகத்தான் போயிருக்கிறார்கள்
பறக்கும் தட்டு வந்து இறங்கியதை பார்த்தோம்... அமானுஷ்ய சக்தியின் இயக்கத்தை எல்லோருமே புரிந்து கொண்டிருக்கிறோம்; அயல் கிரகவாசிகளை இருவர் நேரிலேயே பார்த்திருக்கிறார்கள். இன்னும் வேறென்ன சான்று வேண்டும் உங்களுக்கு?
மாடஸ்டியும், வில்லியும் இதை ஏற்றுக் கொள்ள வேண்டும்... அதற்காகவே அவர்களை அழைத்து வந்தேன்,... நேரில் பார்த்தாலன்றி திருப்தியடையமாட்டார்கள்... அதனால்தான் போயிருக்கிறார்கள்
தீவில் - மாடஸ்டி திடீரென்று தடுமாறி நின்றாள்
என் தலை... கிறுகிறுக்கிறது - வில்லி


மாடஸ்டி அப்படியே கீழே சரிந்தாள்
ஆவ்... என் தலையும் கிறுகிறுக்கிறதே
மறு நிமிடம் இருவருமே மயங்கி விழுந்து கிடந்தார்கள்
படகில் -
பிரதமருக்கு தகவல் அனுப்புவதை டார்ரண்ட் தாமதப்படுத்துவது முட்டாள்தனம்
மனித சமுதாயத்தின் எதிர்காலத்தையே மாற்றியமைக்கும் புரட்சிகரமான சங்கதி இது ஜான் - கூடுதலாக ஒருநாள் எடுத்துக் கொள்வதில் தப்பே இல்லை.
இதுவரை நான்கு பேர் அந்தத் தீவுக்கு போயிருக்கிறார்கள்
புரபஸர்... அவர்களை நாம் திரும்ப பார்ப்போமா? - உயிரோடு?
அயல்கிரகவாசிகளின் நியாயங்கள் வேறுமாதிரி இருக்கலாம்!
நம்மைவிட புத்திசாலிகளானவர்கள், தாக்கினாலன்றி யாருக்கும் கேடு விளைவிக்க நினைக்கமாட்டார்கள்... 'மாதிரி'க்காக என்று இவர்களை தங்கள் கிரகத்துக்கு கடத்திக் கொண்டு போனால்தான் உண்டு.



தீவில் -
கண்களைத் திற... எழுந்திரு
மாடஸ்டி மயக்கம் நீங்கி எழுந்தாள்
யா... யார் நீ?
நான் ரேபர்ன் - அங்கே உன் நண்பனை எழுப்பிக் கொண்டிருப்பவன் பெல்
படார் !
அயல்கிரகவாசிகளோடு தொடர்பு கொண்ட ஜோடி நாங்கள் தான்! சுதாரித்துக் கொள்... மிஸ் பிளைஸி - நாம் சொகுசுப் படகுக்கு திரும்ப வேண்டும்!
என் பெயர் உனக்கு எப்படித் தெரியும்?
அயல்கிரகவாசிகள் டெலிபதி மூலமாக எனக்குச் சொன்னார்கள்!
நடந்ததை நினைவு கூர்ந்து பார்ப்போம்... நாங்கள் அங்கே வந்து கொண்டிருந்தோம்... ஒரு அயல்கிரகவாசியின் உருவத்தை பார்த்தோம்... மயங்கிச் சரிந்து விட்டோம்...
பிறர் மனத்தின் மீது ஆதிக்கம் செலுத்தும் ஆற்றல் பெற்றிருக்கும் எதிரிகள் உங்களை தூங்கச் செய்திருக்கிறார்கள்.
உங்களை நெடுநேரம் மயக்கத்தில் கிடத்தியவர்கள் எங்களை ஏன் லேசாக விட்டுவிட்டார்கள்?



தேவையான விபரங்களை எங்களுடைய மனங்களிலிருந்தே சேகரித்துக் கொண்டிருக்கக்கூடும்...
ஆனால் நான் வேறு பாலினம் ஆயிற்றே - என் மீது தனி அக்கறை காட்டுவதுதானே இயற்கை!
அயல்கிரகவாசிகள் எத்தனை பேரை பார்த்தீர்கள்!
ஐந்தாறு பேரை! ஆனால் நிறையப் பேர் வந்திருக்கக்கூடும்.
அவர்களுடைய பறக்கும் தட்டின் உட்புறத்தை பார்த்தீர்களா?
ஒரு பகுதியை பார்த்தோம்... அப்படியொன்றும் சிக்கலான இயந்திர அமைப்பு இருப்பதாக தெரியவில்லை. விஞ்ஞானத்தில் நம்மைவிட அவர்கள் எவ்வளவோ முன்னால் போய்விட்ட மாதிரி தெரிகிறது...
நாங்கள் பெரும்பாலான நேரம் அரை மயக்க நிலையில் இருந்தோம்... ஏகப்பட்ட சோதனைகள் நடத்தினார்கள்... எங்களுக்கு எந்தக் கேடும் ஏற்படாது என்று உறுதி சொன்னார்கள்.
புறப்படுங்கள்... நாம் இங்கிருந்து போய்விட வேண்டும்
ஏன்...?


நாம் உடனடியாக தீவை விட்டு வெளியேறி சென்று விடவேண்டும் என்பது அவர்களுடைய உத்தரவு... அவர்களுடைய விஞ்ஞான முன்னேற்றத்தின் முன் நாம் அற்பமான கற்கால மனிதர்களைப் போல... அப்படிப்பட்டவர்களோடு வாதிட்டுக் கொண்டு நிற்க முடியுமா?'
ஏன் கூடாது... என்ன இருந்தாலும் இது நம் பூமி... அவர்கள் விருந்தாளிகள் தானே!
டெலிபதி மூலம் எனக்கு தெரிய வந்த செய்தி யாதெனில் அவர்கள் விரைவிலேயே திரும்பிச் செல்லவிருக்கிறார்களாம்...
...அவர்களுடைய வாகனம் மேலெழும்பும்போது ஏற்படும் விளைவு தீவில் பாதியை நாசமாக்கிவிடுமாம்
எனவே... வாருங்கள். ஓடிப் போய்விடுவோம்!
நீங்கள் முன்னால் போங்கள்... பத்து நிமிடங்கள் கழித்து நாங்கள் பின் தொடர்கிறோம்.
எங்கே போகிறீர்கள் ?
முகட்டுக்கு...! பறக்கும் தட்டையும் அந்த விந்தை நபர்களையும் அருகிலிருந்து பார்க்க ஆசை...


நல்லவிதமாகச் சொன்னால் கேட்கமாட்டார்கள்.
ஆமாம்... இவர்களுடைய இஷ்டத்துக்கு விட்டால் ஆபத்தாகிவிடும்!
மிஸ் பிளைஸி, மிஸ்டர் கார்வின் - நில்லுங்கள் அப்படியே!
உங்கள் வசம் ஆயுதங்கள் இல்லை என்று சொன்னார்கள்... என்றாலும் கைகளை மேலே உயர்த்துங்கள்...
எல்லாமே தெரியுமா?
இல்லை... ஒரு யூகம்தான் - உங்களுடைய இந்தப் புதிரான நடவடிக்கைக்கு வேறு என்ன காரணம் இருக்க முடியும்!
ம்ம்... ஆக - இது... ஒரு பித்தலாட்ட நாடகம்... இல்லையா?
புரபஸர் கார்ஸனை தவிர மற்றவர்கள் எல்லோரும் ஒரு கூட்டணி - அப்படித்தானே!
பெல் பேசுகிறேன்... எமெர்ஜென்ஸி திட்டம் பலிக்கவில்லை... அவர்களை கைது செய்வதை தவிர வேறு வழியில்லை


சுத்த மோசம்... - சரி, அவர்களை கொண்டு வாருங்கள்
விஷமத்தனமாக எதையும் செய்ய முற்படாதீர்கள் - உயிர் உடலில் தங்காது...
சுட்டுவிடுவாயோ?
ஆமாம் - அவசியப்பட்டால்! சைலன்ஸர் பொருத்தப்பட்ட துப்பாக்கி வெடியோசை சொகுசுப் படகில் கேட்காது.
என்ன செய்யலாம் இளவரசி..? என் கையில் ஒரு கல் இருக்கிறது... ரேபர்னை வீழ்த்த இது போதும்.
இவர்கள் வில்லன்களாகத் தெரியவில்லை வில்லி... இணக்கமாக நடந்து கொண்டால் நிறைய விஷயங்களை சுலபமாகவும் சீக்கிரமாகவும் தெரிந்து கொள்ள முடியும் என்று தோன்றுகிறது...
இப்படியொரு செட் - அப்பை நிர்மாணிக்க கோடிக் கணக்கில் செலவாகியிருக்குமே
டேனியலுக்கு இது அற்பமான சங்கதி
திட்டமிடப்பட்ட பித்தலாட்ட நாடகம் இது என்று தெரிந்த பின் அது அரங்கேற்றப்பட்ட விதத்தை தெரிந்து கொள்ள ஆர்வம் தோன்றுகிறது...!
சுலபமாக புரிந்துவிடும்!


பறக்கும் தட்டு வந்து இறங்கியதை நேரில் கண்டதாக ஐவர் சொல்லியிருக்கிறார்கள்... அது பொய். ஆனால் அங்கே இருக்கக் கூடியது எதுவாயினும் அது திடீரென்று வெளிப்பட்டிருக்க வேண்டும்
பலதுண்டுகளாக எடுத்துவரப்பட்டு இங்கே வைத்து ஒருங்கிணைத்து கட்டப்பட்டதாக இருக்கும் அந்த பறக்கும் தட்டு... எதையாவது வைத்து மூடிப் போட்டு வைத்திருந்திருப்பார்கள்
அத்தனையும் பிளாஸ்டிக்கிலானவை - ராட்சஸ முயற்சிதான்!
அதை மூடியிருந்த திரையை நொடியில் விலகச் செய்து அது திடீரென்று வந்து இறங்கியதாக கதை கட்டிவிட்டிருக்கலாம்!
ஐந்த பேர் வந்து சொன்னதால் அது பொய்யாக இருக்குமோ என்ற சந்தேகம் விஞ்ஞானி ஜான் கார்சனுக்கு எழவேயில்லை.
டேனியல் தன் பைனாகுல்ரை பறக்கும் தட்டு நோக்கி உயர்த்திய போது ஏதோ ஒரு கதிர்வீச்சு அதை பாதித்து சிதைத்துவிட்டதாக சொன்னதும் பொய்...


பைனாகுலரின் லென்ஸ்கள் முதலிலேயே அப்படித்தான் இருந்தன...! அதே போல...
... கப்பலின் எஞ்சின் ஓய்ந்து போனதான புதிரும் அளப்புதான்!
அந்தப் பக்கமாக திரும்பி நடங்கள்... எங்களுடைய முகாம் முகட்டின் மறுபுறம் இருக்கிறது...
நீதானே கடல் - விமானத்தின் பைலட்? மீக்: அமைப்பை தீய்ந்து போகச் செய்தது உன் கைவரிசைதானே?
நாம் நேரில் சந்தித்த அயல்கிரகவாசி வேடமணிந்த நபர் டெலிபதி மூலம் நம்மை வீழ்த்தியது?
நாற்றமில்லாத ஒருவகை மயக்க வாயு பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.
ஆமாம்... புரபஸர் கார்ஸன் ஒருவேளை இங்கே வந்தால் தேவைப்படும் என்று செய்யப்பட்டிருந்த ஏற்பாடு அது...
''அயல்கிரகவாசிகள்'' தங்குவதற்கு இவ்வளவு முன்னேற்பாடான வசதிகள் எல்லாம் செய்து வைக்கப்பட்டிருக்கிறதே!


பிரம்மாண்டமான திட்டம்... மூன்று மாதங்களாக இரவு பகலாக வேலை நடந்தது இங்கே!
இன்னமும் எனக்கு விடை தெரியாத கேள்வி - ஏன் இந்த நாடகம்?
'கடல் புறா' வில்
தீவை வெறித்துப் பார்த்துக் கொண்டு இங்கேயே நிற்பதில் அர்த்தமில்லை ஸர் ஜெரால்டு... வாருங்கள் சாப்பிட
நன்றி...
டேனியல் எங்கே?
குட்டித் தூக்கம் போடுகிறார் - நேற்றிரவு சரியாகவே தூங்கவில்லை
ரேடியோ அறையில் -
பிளைஸியையும் கார்வினையும் பிடித்தாயிற்றா!
பிடித்துவிட்டோம் பாஸ்!
டேனியலுக்கு தீவிலிருந்து செய்தி
அவர்கள் இருவரையும் நம்மோடு சேர்ந்து கொள்ளும்படி தூண்ட முயற்சிக்கிறேன் பாஸ்!
அது ஆபத்தில் போய் முடியலாம்-
ஆரம்பத்தில் சம்மதிப்பது போல் பாசாங்கு பண்ணிவிட்டு பிறகு நம் திட்டத்தை வெளியிட்டு நாசம் பண்ணிவிடுவார்கள்... நாம் ஆபத்தோடு விளையாடக்கூடாது.
அப்படியானால் அவர்களை தீர்த்துக்கட்டிவிடவா?


ஆமாம்... வேறு வழியில்லை நமக்கு - ஆண்டவன் நம்மைக் காப்பாற்றுவாராக...!
அவர்கள் வந்து விட்டார்கள்... மிச்சத்தை அப்புறமாக பேசலாம் பாஸ்...
ஓகோ... நாங்கள் இங்கே வருவதை இப்படித்தான் ரேடியோ மூலம் டேனியல் சொல்லி தெரிந்து கொண்டீர்களா!
கரெக்ட்! என் பெயர் பால்! இவ்விருவரும் எங்கள் குழுவைச் சேர்ந்தவர்கள்... பெயர் என்ன என்பது முக்கியமல்ல.
அயல்கிரகவாசியாக தோன்ற இந்த அங்கிதான் பயன்படுத்தப்பட்டதோ...?
வன்முறையில் எங்களுக்கு நம்பிக்கையில்லை... ஆனால் என்ன செய்வது - நீங்களாக உருவாக்கிவிட்ட நெருக்கடி....
...உங்களுடைய கைகள் வயரினால் பிணைக்கப்படும்,
காட்டுமிராண்டித்தனமானது!



வாஸ்தவம்தான்! இங்கே வாடிக்கையான நியாயங்களுக்கு இடமே இல்லை... அதற்கு காரணம் இருக்கிறது - நீங்களும் தெரிந்து கொள்வதால் தப்பில்லை
மாடஸ்டியின் கைகளும், கார்வினின் கைகளும் வயரினால் பிணைக்கப்பட்டன:..
வயரினால் பிணைக்கப்படுவதில் ஒரு சௌகரியம் என்னவென்றால் அதை திருகிக் கொண்டேயிருந்தால் ஒரு கட்டத்தில் அறுந்துபோகும்
உட்காருங்கள்! இப்போது நீங்கள் புரிந்து கொண்டிருப்பீர்களே - சந்தேகத்துக்கு இடமே இல்லாமல் அயல்கிரகவாசிகள் இங்கே வந்து இறங்கியிருக்கிறதாக புரபஸர் கார்ஸன் ஏற்றுக் கொண்டு விட்டிருப்பார் என்பதை!
உங்களுடைய சூழ்ச்சியின் செயல்முறை அனைத்தும் விளங்குகிறது... ஆனால் இப்படியொரு சூழ்ச்சியை அரங்கேற்றும் காரணம் தான் இன்னமும் புரியவில்லை!
டேனியல், லாரா, லேன், கேப்டன் மற்று பட்கு சிப்பந்திகளாக நாடகமாடும் நபர்கள், இங்குள்ள குழுவினர் அனைவரும் சேர்ந்து நடத்தும் பித்தலாட்டம் இது...


இந்தக் கூத்து எல்லாமே ஒரே ஒரு மனிதரை ஏமாற்ற...! அயல்கிரகவாசிகள் தீவில் வந்து இறங்கியிருக்கிறார்கள் என்று புரபஸரை நம்ப வைக்க!
ஆமாம்...
...ஏனென்றால் அவர் சர்வதேச புகழ்மிக்க விஞ்ஞானி... அவர் எதைச் சொன்னாலும் உலகம் அதை அப்படியே ஏற்றுக் கொள்ளும்... அப்படியொரு பெருமை அவருக்கு உண்டு.
ஆனால் உண்மை என்றாவது ஒருநாள் வெளிவராமலா போய்விடும்..?
அப்படியொரு நிலைமை வராது... ஏனென்றால் அயல்கிரகவாசிகள் திடீரென்று வந்தது போலவே மீண்டும் சீக்கிரமே தங்கள் வாகனத்தை கிளப்பிக் கொண்டு போய்விட்டதாக ஜோடனை பண்ணிவிடுவோம்.
எங்கள் திட்டத்தில் எந்த ஓட்டையும் கிடையாது.
ஆனால் இப்படியொரு திட்டம் போடப்பட்டது ஏனென்று இன்னமும் சொல்லவில்லையே
இந்த குழுவுக்கு டேனியல்தான் தலைவர்... உலக மக்களிடையே வெறுப்பும், கசப்பும் வளர்ந்து நாளடைவில் நாடுகளிடையே சண்டை மூண்டு மனித இனமே பூண்டோடு அழிந்துபோகும் என்கிற பயம் எங்களுக்கு உண்டு!
...அந்த விபரீதம் நடக்காமல் தடுக்க வேண்டுமானால் ஜனங்களின் எண்ணப் போக்கை திசை திருப்பிவிடவேண்டும்


புது அபாயம் பிரம்மாண்டமான அளவில் உருவாகும் போது தங்களிடையே வளர்ந்து வரும் வேற்றுமையை மறந்து ஒரே சக்தியாக திரளுவார்கள்.
அப்படியொரு பொது அபாய சூழலை பூமிக்கு வெளியிலிருந்து தான் கொண்டுவர முடியும்!
வித்தியாசமான ஜீவராசிகள் அண்ட வெளியிலிருந்து பூமிக்கு வந்திருக்கின்றன என்ற செய்தி தீப்போல் மக்களிடையே பரவினால் என்னமாதிரியான பாதிப்பு ஏற்படும் என்று சற்றே எண்ணிப் பாருங்கள்...
...அவர்கள் முன்பு எப்போதோ ஒருமுறை இங்கே வந்திருக்கிறார்கள் என்றொரு நம்பிக்கை ஜனங்களிடையே நிலவி வருகிறது... இங்கே காணப்படும் நாய் முகமுடைய உருவச் சிலைகள் அதற்கு சான்றாக விளங்குகின்றன.
இந்த பிரபஞ்ச வெளியில் உயிர் வாழும் ஜீவராசிகள் நாம் மட்டும் இல்லை என்று ஜனங்கள் புரிந்து கொள்வார்கள். வேற்றுலகினர் நம்மைவிட புத்திசாலிகள் என்பதோடு நம்மை கண்காணித்துக் கொண்டே இருக்கிறார்கள் என்ற எண்ணமும் ஏற்படும்.


அந்த எண்ணம் மனிதர்களின் எண்ணப் போக்கை, வழி முறையை மாற்றிவிடும் என்று நம்புகிறீர்களா?
ஆமாம்... சுய அழிவிலிருந்து அது நம்மை காப்பாற்றும்.
ஆனால் அப்படியொரு சூழ்ச்சியை ஜனங்கள் சுலபத்தில் நம்பி ஏற்றுக் கொண்டால்தானே!
உண்மையில்லை என்றாலும் விஷயம் அப்படித்தான் என்று அவர்களை நம்ப வைத்துவிட முடியும்
எப்படி..?
இன்றிரவு பறக்கும் தட்டு கிளம்பிவிடும்...
படகிலிருக்கும் பலரும் அதை பார்த்ததாக சாட்சியளிப்பார்கள் அதை தொடர்ந்து இங்கே தீவில் பிரளயம் மாதிரி நாசம் விளையும்...
தொடராக பல வெடிகுண்டுகள் வெடித்து இந்த முகடு உருத்தெரியாமல் சிதைந்து கடலுக்குள் விழுந்து விடும்! நாங்கள் இங்கே நிர்மாணித்த தடயங்கள் அத்தனையும் சுத்தமாக நீருக்குள் அமிழ்ந்து போகும்!


அந்த அழிவு நேரிடும்போது உங்கள் கதி?
ரேபர்னும் பெல்லும் படகுக்கு திரும்பியிருப்பார்கள் - இங்கே அயல்கிரக வாசிகளோடு அவர்களுக்கு ஏற்பட்ட அனுபவங்களை விலாவாரியாக விவரிப்பார்கள்.
என்னோடு இங்கிருக்கும் தோழர்கள் இருவரும் இரவில் யாரும் காணாதவாறு சொகுசுப் படகில் ஏற்றப்பட்டு படகு துறைமுகம் போய் சேரும் வரை ஏதாவது ஒரு காலி கேபினுள் ஒளித்துவைக்கப்படுவார்கள்.
நீங்கள்?
வெடி விபத்து ஒரு சிக்கலான தொடர் சம்பவம்... ரேடியோ கண்ட்ரோல் காலைவாறிவிடலாம்... எனவே, நான் இங்கேயே இருக்கப் போகிறேன் - ஆகவேண்டியதை கவனிக்க!
எங்களுடைய நோக்கத்தில் சுயலாபம் ஏதுமில்லை என்பதை நீங்கள் புரிந்து கொண்டால் சரி!
...நாங்கள் எங்களுக்குள் சற்று தனியாக ஒரு சில விஷயங்கள் பேச வேண்டியிருக்கிறது...
சைமன்... இவர்கள் இருவரையும் பெட்ரூமில் போட்டு பூட்டிவை.


நாசம் விளையும் போது இங்கே நீங்கள் இருந்தால் உயிருக்கு உத்தரவாதம்?
மனித குல மேம்பாட்டுக்காக நான் இந்த உயிர்த்தியாகம் செய்யத்தான் வேண்டும்
எங்கள் கதி?
நீங்களும்தான், என்னோடு சேர்ந்து இங்கே பலியாகப் போகிறீர்கள்...! எனக்கு அதில் கொஞ்சமும் இஷ்டமில்லை என்றாலும் வேறு வழி இல்லை!
படுக்கையறையில் -
வயரை ஏதாவது செய்ய முடிந்ததா வில்லி?
இன்னமும் இல்லை... - பால் பேசிக் கொண்டிருந்தபோது மெள்ள முறுக்கிக் கொண்டேயிருந்தேன்
நானும்தான்...! ஆனால் அவ்வளவு சுலபத்தில் அறுந்துவிடாது என்று தோன்றுகிறது...!
பிரயோஜனப்படுகிற மாதிரி இங்கே ஏதாவது கிடக்கிறதா பார்



பிளாஸ்டிக் ப்ளாஸ்க் - டம்ளர்...! ஊஹும் வயரை அறுக்க இவை பயன்படாது ...
டம்ளரை எடுங்கள் வில்லி - அதை வேறு வகையாக பயன்படுத்தலாம்
இந்த ஜோடியை நாம் கொன்றுவிடுவோமா... அல்லது வெடிவிபத்து நிகழும் போது என்னோடு சேர்ந்து மடிய விட்டுவிடுவோமா ?
ரொம்ப சமர்த்தான பேர்வழிகளாக தோன்றுகிறார்கள். அவர்களிடம் உன்னை தனியாக விட்டுப் போக மனம் சம்மதிக்கவில்லை, பால்
கரெக்ட்...! கொன்றுவிடுவோம் - ஆனால் அதை யார் செய்வது?
டம்ளரை சுவரில் வைத்து அதில் காதை பொருத்தி ஒட்டுக் கேட்டாள் மாடஸ்டி....
கொலை செய்வதல்ல நம் நோக்கம்... ஒரு நல்ல காரியத்திற்காக அதை செய்ய வேண்டியிருப்பதால், நான் ரெடி!
வேண்டாம் சைமன்... அந்தப் பழியை நான் ஏற்கிறேன்... ஏனென்றால் அடுத்த சில மணி நேரத்தில் மடியப் போகிறவன் நான்...


என்ன பேசிக் கொள்கிறார்கள்?
நல்ல லட்சியத்தியத்திற்காக நம்மை தீர்த்துக் கட்டப் போகிறார்கள்
நம்மை சுட்டுக் கொல்ல பால் வந்து கொண்டிருக்கிறான்... நான் சொல்லும்போது அதிரடியாக பாய்ந்து தாக்குங்கள் வில்லி.
கைகள் கட்டப்பட்ட நிலையில் தரையில் படுமோசமாக விழுவேனே...
நான் பார்த்துக் கொள்கிறேன் - அப்படியொரு அசம்பாவிதம் நிகழாமல்!
தயக்கம் வேண்டாம் - போ... தாமதித்தால் காரியம் கெட்டுவிடும்
இப்படியொரு ஈனத்தனமான காரியத்தை செய்ய வேண்டியிருக்கிறதே என்கிற தயக்கம் தான் - நம் இலட்சியத்தை நினைவு கூர்ந்து காரியத்தை கச்சிதமாக முடிப்பேன்...
கதவை நோக்கி நடந்தான் பால்
வில்லி... தாக்குங்கள்!



மடேர்
எட்டி இரண்டு அடி எடுத்து வைத்தாள் மாடஸ்டி...
வில்லியின் இருநூறு பவுண்டு எடை மொத்தமும்... கதவின் மீது ஒருங்கே குவிந்தது...
ஆ!
அவருக்குக் கீழே புகுந்த மாடஸ்டி. விழாமல் பார்த்துக் கொண்டாள்...
பிடியுங்கள் இவர்களை!
போய் எதிர்திசை கதவை திறங்கள் - இவர்களை நான் கவனிக்கிறேன்
ஆவ்வ்
கும்!
க்ார்வினை அடுத்து அதிரடியாக அவர்களை மாடஸ்டி தாக்கினாள்



பால்... துப்பாக்கியை எடு!
மடேர்!
சத்!
வெளிக் கதவை கார்வின் தகர்த்து திறந்தபோது -
மடேர்!
சத்!
வில்லி - சீக்கிரம்!
முடிந்தது - ஓடி வா.இளவரசி!
ஓடுங்கள் வேகமாக!
எந்தப் பக்கம் போவோம்?
தெரியவில்லை! நேராகவே போவோம் வயரை அறுக்க வழியில் முயன்று கொண்டே செல்வோம்...!
...கைகள் விடுதலை பெறாவிடில் மறுபடியும் சிக்கிக் கொண்டு விடுவோம்



பால்... உனக்கு ஒன்றும் ஆகவில்லையே
இல்லை அவர்களை விரட்டிச் செல்லுங்கள்!
எதிர் பக்கம் போகிறோமோ?
ஆமாம்... வந்த வழியில் போனால் பிடிபட்டுவிடுவோம்
டார்ரண்ட் படகிலிருந்து நம்மை காணமுடியாது... தீவின் மறுபக்கத்தில் நாம் இருக்கிறோம்
பார்த்தாலும் நமக்கு எவ்வகையிலும் அவர் உதவ முடியாது
வகையாக மாட்டிக் கொண்டு விட்டார்கள்... பரவலாக விலகி சுற்றி வ.ளையுங்கள்!
வருகிறார்கள்!
நீர்மட்டத்திலிருந்து ரொம்ப உயரத்தில் இருக்கிறோம் - ஆழம் இங்கே அதிகமாக இருக்கும் என்று நம்புகிறேன்..
ஆகா... வயர் அறுந்து வருகிறது இளவரசி!


ஐந்து வினாடிகளுக்குப் பிறகு -
விரல்கள் மரத்துப் போயிருப்பதால் துரிதமாக செயலாற்ற முடியவில்லை
விடுங்கள் அதை வில்லி - அவகாசமில்லை...
வில்லி தன் கட்டை களைந்துவிட்டார்... ஆனால் மாடஸ்டியால் இயலவில்லை...
குதியுங்கள் வில்லி - நானும் அடுத்து குதிக்கிறேன்
கைகள் கட்டப்பட்ட நிலையில் எப்படி குதிப்பாய்..? முதுகெலும்பு முறிந்து போகும் !
குதியுங்கள் என்றேன் - மூழ்கி எழுந்ததும் பாறை மறைவில் ஒதுங்குங்கள்
தள்ளிவிடப்பட்ட போதிலும் தன்னிச்சையாக உடல் வாகாக வளைந்து நீரினுள் பாயத்தயாரானது...
கடவுளே! மாடஸ்டி தொலைந்தாள்!
முதல் தோட்டா சில அங்குலங்கள் விலகி பாய்ந்த கணத்தில் மாடஸ்டியும் நீரினுள் பாய்ந்தாள்...
இதுவரை இவ்வளவு உயரத்திலிருந்து நான் ஒருபோதும் குதித்ததில்லை...



...ஒரு பந்து போல் சுருண்டு கால்களை கைகளிடையே கொண்டு வந்தாள்...
உயரம் அதிகமாக இருப்பதால் இஷ்டத்துக்கு உடலை வளைக்க அவகாசம் கிடைத்தது - அதிர்ஷ்டம் தான்...!
தொபுக்!
...நீரை தொடும் வேளையில் மீண்டும் உடலை நேராக்கிக் கொண்டு விட்டாள்...
அதிக உயரத்திலிருந்து குதித்ததால் ரொம்ப ஆழத்திற்கு சென்றுவிட்ட மாடஸ்டி தம் பிடித்து மேலே வந்தாள்
நீட்டிக் கொண்டிருக்கும் பாறை முகட்டின் கீழே போய்ச் சேரவேண்டும்... வில்லி அங்கே இருப்பார்... எங்களை அவர்கள் பார்த்துவிட்டால் படகில் வந்து சேருவது நிச்சயம்...
மேலே -
200 அடிக்கு குறையாது... அவர்கள் செத்துப் போயிருப்பது உறுதி அல்லது குறைந்த பட்சம் உணர்விழந்து மயங்கிப் போயிருக்க வேண்டும்...
தொடர்ந்து கண்காணியுங்கள்
பாறையை ஒட்டி மேலே நீர்மட்டத்திற்கு வந்தாள் மாடஸ்டி
ஹா...ப்ப்..பா!
அப்பாடா... வந்துவிட்டாயா...!


மாடஸ்டியின் கட்டை அவிழ்த்தார் வில்லி...
சில வருடங்களுக்கு முன் நாம் இந்த தீவுக்கு வந்திருந்த போது இங்கே சில குகைகள் இருக்கப் பார்த்தோமில்லையா?
இருட்டும் வரை பதுங்கிக் கிடக்க தோதான இடங்கள்... நல்லதாக ஒன்றை சீக்கிரமே தேடிப்பிடிக்க வேண்டும்.
பத்து நிமிடங்களுக்குப் பின் -
எதையும் பார்க்க முடியவில்லை... ஆனால் காலடியில் நன்றாக காய்ந்து கிடக்கிறது...
அந்த ஆராய்ச்சி எதற்கு? காலம் முழுக்க நாம் இங்கேயே குடியிருக்கப் போகிறோமா, என்ன?
குச்சிகள் சிலும்புகளை ஒன்று திரட்டி தீ மூட்டலாம் - ஆனால் தீக்குச்சி?
நனைந்து போய்விட்டது...
ஆனால் - கவலை வேண்டாம்...! இதோ -
வில்லி தீ எப்படி பற்றியது?
முன்னொரு காலத்தில் சிலந்தி வலையில் சிக்கிக் கொண்ட ஒரு தேவதையை நான் காப்பாற்றினேன்... அவள் சொல்லித் தந்த யுக்தி இது -
வாழ்க லைட்டர்
வாழ்க தேவதை!


அங்கே -
அவர்களை சுடவேண்டிய அவசியம் வரவில்லை பால்... பாறை உச்சியிலிருந்து நீரினுள் பாய்ந்து விட்டார்கள்
பாவப்பட்ட ஜென்மங்கள்! நம் திட்டத்தின் அடுத்த கட்டத்துக்குப் போவோம்... நீங்களிருவரும் 'கடல் புறா'வுக்குத் திரும்புங்கள்...
பத்து நிமிடங்கள் பார்த்துக் கொண்டு நின்றோம் - அவர்கள் மேலே வரவேயில்லை!
அயல்கிரகவாசியின் படம் பதிந்த சில அடி படச் சுருளோடு கூடிய சினி-கேமரா வெடிவிபத்தினால் தொடமுடியாத தொலைவில் கிடக்கிறது -
...அயல்கிரகவாசிகளை சந்தித்து விட்டு வந்திருப்பதாக கதை க ட்டுங்கள்... கேட்டால் இங்கே வேறு எந்த ஆணையோ பெண்ணையோ பார்க்கவில்லை என்று சத்தியம் பண்ணுங்கள்
அது அப்படியே அங்கே கிடக்கட்டும் - புரபஸர் கார்ஸன் அப்புறமாக இங்கே வந்தால் அதை கண்டெடுக்க விட்டுவிடுவோம். பிறகு - உங்களிருவரையும் இருட்டிய பிறகு சொகுசுப் படகில் ஏற்றி பதுக்கி வைக்க வேண்டிய பணி மட்டுமே மிஞ்சியிருக்கும்
குகையினுள் - !
படுஜோராக இருக்கிறது வில்லி
சுள்ளிகள் இன்றும் கொஞ்சம் அகப்பட்டால் நம் உடைகளையும் உலர்த்திக் கொண்டு விடலாம்!



மதிய வேளையில் -
ஸார்! மிதவை திரும்பி வருகிறது! வருவது ரேபர்னும், பெல்லும் தான் என்று நினைக்கிறேன்...
ஆண்டவனுக்கு நன்றி
மிரட்சியடைந்த முகபாவத்தோடு இருவரும் மேலே ஏறி வந்தார்கள்
அபல்கிரகவாசிகளை சந்தித்தீர்களா?
மாடஸ்டி பிளைஸியும், வில்லி கார்வினும் அங்கே வந்தார்களே - பார்த்தீர்களா?
யாரது? - உங்கள் கேள்வி புரியவேயில்லை!
அடுத்த இரண்டு மணி நேரத்திற்கு அவ்விருவரையும் கேள்வி மேல் கேள்வி கேட்டு துளைத்து எடுத்து விட்டார் புரபஸர்...
இன்றைக்கு இதுபோதும் - ரொம்பவும் களைத்துப் போய் வந்திருக்கிறார்கள். போய் தூங்கட்டும்
சரி - போங்கள்
உற்சாக மூட்டும் சங்கதி யாதெனில் இவர்கள் நிறைய தகவல்களை சேகரித்துக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆனால் அவர்கள் கண்டதாகச் சொல்லும் பல சங்கதிகளுக்கு அர்த்தம் விளங்கவேயில்லை...
...ஒரு கற்கால மனிதன் ஒரு கம்ப்யூட்டரை பார்த்துவிட்டு விவரித்தால் இப்படித்தான் இருக்கும்...
மாடஸ்டிக்கும், வில்லிக்கும் என்ன நேர்ந்தது என்று எனக்குத் தெரிய வேண்டும்.


தீவு நோக்கிச் செல்லும் வழியில் மிதவை விபத்துக்குள்ளாகி அவர்கள் கடலில் மூழ்கி மாண்டு போயிருக்கலாம்...
அத்தை சுலபத்தில் எமனிடம் சிக்கக் கூடியவர்கள் அல்ல அந்த இருவரும்!
குகையினுள் - அந்திப் பொழுதில்....
மரம் ரெடி இளவரசி...
கட்டுமரம் அட்டகாசமாக இருக்கிறது வில்லி...
கிண்டலா?
சீக்கிரமே கிளம்பினால் தேவலாம்... முடிவே இல்லாத இரவு காத்துக் கிடக்கிறது நமக்கு!
அயல்கிரகவாசிகள் வந்து இறங்கியிருப்பது தான் ஊர்சிதமாகிவிட்டதே... இன்னமும் ஏன் பிரதமருக்கு தகவல் அனுப்புவதில் தாமதம் காட்டுகிறீர்கள் ஜெரால்டு?
நான் திருப்தியடைந்து விட்டேனோ இல்லையோ - நாளை மதியம் வரை தாமதிப்பதாக மாடஸ்டிக்கு நான் வாக்களித்திருக்கிறேன்
இப்படியொரு அழுத்தக்காரரை நான் கண்டதேயில்லை
கிடக்கிறார்... விடு - லாரா! இன்றிரவு பறக்கும் தட்டு கிளம்பிச்
செல்லும் காட்சி அரங்கேறிவிட்டால் நம் திட்டம் பலித்துவிட்ட மாதிரிதான்!


விடிவதற்கு நேரம் இருக்கையில் டார்ரண்ட் தட்டி எழுப்பப்பட்டார்...
மாடஸ்டி - நீயா!
உஷ்ஷ்...! நாங்கள் இரகசியமாக படகுக்கு வந்து ஒரு மணி நேரமாகிவிட்டது.
அயல்கிரகவாசிகள உங்களை எப்படி போக விட்டார்கள்? வில்லி எங்கே?
அயல்கிரகவாசிகள் வெறும் கட்டுக்கதை... வில்லி வேறொரு காரியத்தில் முனைப்பாக ஈடுபட்டிருக்கிறார் - நான் சொல்லப்போவதை கவனமாகக் கேளுங்கள்
டேனியல்... என்ன ஆயிற்று?
ஒரே குழப்பம்! இங்கே டியூட்டியில் இருக்க வேண்டிய ஜான்ஸனைக் காணோம்... மாயமாக மறைந்துவிட்டான். பாலோடு தொடர்பு கொள்ள முயற்சி செய்கிறேன்...
...ஆனால் ஏனோ அவனிடமிருந்து பதில் இல்லை! உரிய நேரத்தில் பால் தீவை வெடி வைத்து தகர்க்காவிடில் பறக்கும் தட்டு கிளம்பிச் சென்றதை நாம் பார்த்தோம் என்று கதை கட்ட முடியாது போய்விடும்.
மிஸ்டர் டேனியல்... எல்லோரும் லௌஞ்சில் வந்து கூடுமாறு டார்ரண்ட் அழைக்கிறார் - மிக அவசரமாம்... ஒருவர் பாக்கி இல்லாமல் வரவேண்டுமாம்.


தூக்கத்திலிருந்தவர்களை எழுப்பி தொந்தரவு செய்ததற்கு ஸாரி... எல்லோரும் வந்தாயிற்றா?
ஜான்ஸன் தவிர எல்லோரும் இருக்கிறோம் - அவன் எங்கே போனானோ தெரியவில்லை
காலி கேபினுள் பதுக்கி வைக்கப்பட்டிருக்கும் பாலின் இரு சகாக்கள்?
ஜெரால்டு... நீங்கள் பேசுவது எதுவுமே எனக்கு அர்த்தமாகவில்லை
படுபயங்கரமான பித்தலாட்ட வேலை இது ஜான் - உன்னை, முட்டாளாக்கும் முயற்சி.
கடவுளே! இவருக்குத் தெரிந்துவிட்டது!
புரபஸர்... உங்கள் நண்பர் டார்ரண்ட்டுக்கு சித்தம் பேதலித்துவிட்டது என்று நினைக்கிறேன்... ஏதேதோ உளறுகிறார் - கேப்டன் அவரை கொஞ்சம் கவனி!
நடக்காது... மிஸ்டர் டேனியல்!
இனியும் உங்களுடைய பித்தலாட்டம் செல்லுபடியாகாது!


இப்போதும் ஒன்றும் மோசம் போய்விடவில்லை! டார்ரண்ட் கார்ஸன் உள்பட உங்கள் அனைவரையும் அயல்கிரகவாசிகள் கூட்டிச் சென்றுவிட்டதாக கதை கட்டிவிடலாம்!
சான்று கூற புரபஸர் கார்ஸன் இல்லையேல், உங்கள் திட்டம் எப்படி பலிக்கும்? அத்தோடு இன்னொரு விஷயம்!
வன்முறைய்யை வெறுப்பவள் நான்...! ஆனால் நீங்கள் துப்பாக்கியை உருவ முயன்றால் புஜத்தில் கத்தி வந்து ஆழப் பாய்வது நிச்சயம்!
இவர்கள் செத்துவிட்டதாக அல்லவா பால் சொன்னான்!
தீவிலுள்ள உங்கள் நண்பர்கள் எங்களை கொல்ல முயன்றார்கள்... உலக அமைதியை உறுதிப் படுத்தும் உங்களுடைய உயர்ந்த இலட்சியத்திற்காக...!
கொல்ல முயன்றார்களா... யார் - அயல்கிரகவாசிகளா?
அயல்கிரகவாசி - வெறும் கட்டுக் கதை ஜான்! உன்னை நம்ப வைத்து, நீ உலகுக்கு சொல்லி ஜனங்களை நம்ப வைக்க வடிவமைக்கப்பட்ட சூழ்ச்சித் திட்டம்!



என்ன ஆயிற்று எல்லோருக்கும்? ஏதேதோ சொல்லி என்னைக் குழப்புகிறீர்களே? டேனியல் என்ன விஷயம்?
தோற்றுவிட்டேன்... ஜான்!
என் திட்டம் தோற்றுவிட்டது... என் இலட்சியமும் மண்ணாகிப் போயிற்று.
அயல் கிரகவாசிகள் வந்து இறங்கியதாக சொல்லப்பட்ட வாக்கு மூலம் அனைத்தும் கட்டுக்கதையா?
ஆமாம்! மிஸ்பிளைஸியிடம் விபரம் கேள் - சொல்வாள்! அவளுக்கு எல்லாமே தெரிந்திருக்கிறது
மாடஸ்டி நடந்ததை விவரித்தாள் -
இத்தனைக்கும் காரணம் இதுதான் புரபஸர் -
...மற்றவர்கள் படுக்கைக்குத் திரும்பலாம்! ஆட்டம் முடிந்துவிட்டது!
... அயல்கிரகவாசிகள் வந்திருப்பதாக கதை கட்டினால் ஜனங்களின் கவனம் திசை திரும்பி அவர்களிடையே ஒற்றுமை பலப்பட்டு பூமியில் அமைதி நிலவும் என்பது இவர்களுடைய கணிப்பு!
ஆமாம்! ஆனால் இனி - ஒற்றுமையை நிலைநாட்டு முன் ஜனங்கள் தங்களுக்குள் அடித்துக் கொண்டு சாகப் போகிறார்கள்.
பாலை கொன்றுவிட்டீர்களா?
இல்லாவிட்டாலும் தானாகவே உயிரை தியாகம் செய்யவிருந்தவன்தானே? ஆனால் நாங்கள் தேவைக்கு மேல் சிறிதளவு வன்முறையையும் கடைப்பிடிக்கவில்லை.பால் அங்கே நல்ல ஆரோக்கியத்தோடு இருக்கிறான்!
இருக்கலாம்... ஆனால் நான் நல்லதே நடக்கும் என்று நம்புகிறவன்!


குகையை விட்டு வெளியேறிய நாங்கள் நீந்தி பீச்சுக்குச் சென்று மூகட்டுக்கு நடந்து போனோம்... பால் தன் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டிருந்தான்...
ரேடியோவை செயலிழக்கச் செய்தோம்... எல்லா கட்டுப்பாட்டு அமைப்பையும் அழித்தோம் - வெடி குண்டுகளை தூண்டி வெடிக்கச் செய்ய இயலாதவாறு!
பிறகு இரப்பர் மிதவையால் இங்கே வந்து ரேடியோ ஆபரேட்டர் ஜான்ஸனை அப்புறப்படுத்தினோம் - ஸ்டோர் ரூமில் அவனை கட்டிப் போட்டிருக்கிறோம்!
அப்புறம் டார்ரண்டுக்கு விஷயத்தை சொன்னீர்கள் - இல்லையா!
ஒரு மணி நேரத்திற்கு முன்பே டோங்காவுக்கு போன் செய்து பறக்கும் படகை கிளம்பி வரத் தகவல் கொடுத்திருக்கிறோம். விடியற்காலையில் அது இங்கே வந்துவிடும்.
நான் பிரதமருக்கு ரேடியோ டெலிபோன் மூலம் செய்தி அனுப்பினேன்...
...புரபஸர் கார்ஸன் தவறான தகவல்களின் பேரில் அயல்கிரகவாசிகள் வந்து இறங்கியிருப்பதாக நம்பி மோசம் போய்விட்டார் என்று பிரதமரிடம் தெரிவித்தேன். முழு அறிக்கையை வந்து சமர்ப்பிப்பதாக சொன்னேன்.
இதில் நீங்கள் சட்டவிரோத காரியம் எதையும் செய்திருப்பதாக தெரியவில்லை - மிஸ் பிளைஸியையும், மிஸ்டர் கார்வினையும் கொல்ல முயன்றதை தவிர!
நாங்கள் அதை மறந்துவிடத் தயார்!
என்ன இருந்தாலும் அது ஒரு நல்ல இலட்சியத்திற்காகத்தானே !



தன்னுடைய பயணிகளோடு கார்ஸனையும் சேர்த்து ஏற்றிச் செல்ல பறக்கும் படகு வந்து சேர்ந்தது...
ஒரு பித்தலாட்டத்தை நீங்கள் முறியடித்து விட்டீர்கள்... ஆனால் அந்த வெற்றிக்குப் பலியானது இப்பூவுலகின் அமைதி என்பது என் கருத்து!
இருக்கலாம்! ஆனால் ஒற்றுமையின் மகிமையைப் புரிந்து கொள்ள மனிதர்களால் முடியாமற் போனால் - மனித இனம் அழிந்து போவதில் பெரிய தவறில்லை!
ஆகா... இம்மாதிரியான உயர் தத்துவங்கள் எனக்கு ரொம்ப பிடிக்கும்
மறுபடியும் கிண்டலா...? அடுத்த தடவை எங்கே போவதானாலும் உங்களை நான் கூட்டிப் போவதாக இல்லை!
பின்னர் பறக்கும் படகினுள் -
இந்த அளவுக்கு தனக்கு முட்டாள் பட்டம் கட்டிவிட்டார்களே - இப்படி ஏமாந்து போனோமே என்று எண்ணி புரபஸர் நொந்து போய் விட்டார்!
அதற்கு அவசியமேயில்லை... யாரையும் ஏமாற்றிவிடும் அளவுக்கு நம்பகமான நாடகம் அது!
இப்படியொரு வெற்றி ஈட்டியிருக்கிறீர்கள், ஆனால் அதற்கான உற்சாகத்தைக் கரணோமே உங்களிடம்?
ஒரு வகையில் பார்த்தால் டேனியலின் இலட்சியம் உன்னதமானதுதானே!
எல்லாமே இப்படி போலி நாடகம் என்றாகி விட்டதே! நிஜமாகவே அயல்கிரகவாசிகள் வந்திருந்தால், எவ்வளவு ஜோராக இருந்திருக்கும்!
முற்றும்




வாசக ஓவியர்_B.மணி, ஜல்லிபட்டி.

# வாசகர் ஹாட்-லைன்



*அனுப்புநர்:*
**N. P. சிங்காரவேலு**
122, மாரியம்மன் கோவில் தெரு,
பெரமனூர், சேலம் - 636 007

Dear Sir,

லயன் 125-வது வெளியீடு "மேகக் கோட்டை மர்மம்" படித்தேன். தங்களது **"ஹாட்லைனில்"** மட்டும் **சிறு தவறு நேர்ந்துள்ளது. ஹாட்லைனின் கடைசி பத்தியில்** 'Miles to go - **before I sleep'** என்பவதற்க்கு பதிலாக 'Miles to so - before I sleep' என்று அச்சடிக்கப்பட்டதோடு (கீட்ஸ்? ஷெல்லி?) இருவரில் ஒருவர் இந்த வரிகளை சொன்னதாக கூறப்பட்டுள்ளது. உண்மையில் இது **(ROBERT FROST)** என்பவரின் பாடல் வரி என்பது குறிப்பிடத்தக்கது.

'Miles to go - before I sleep' என்ற வரிகள் Robert Frost ன் "STOPPING BY WOODS ON A SNOWY EVENING" என்ற பாடலின் கடைசி வரிகளாகும். முழு பாடலும் பின்வருமாறு உள்ளது.

**"STOPPING BY WOODS ON A SNOWY EVENING"**

Whose woods these are I think I know.
His house is in the Village, though;
He will not see me stopping here
To watch his woods fill up with snow.

My little horse must think it queer
To stop without a farmhouse near
Between the woods and frozen lake
The darkest evening of the year.

He gives his harness bells a shake
To ask if there is some mistake.
The only other sound's the sweep
Of easy wind and downy flake.

The woods are lovely, dark, and deep,
But I have Promises to keep,
**And miles to go before I sleep,**
**And miles to go before I sleep.**

**By Robert Frost.**

இந்த பாடல் 'New Hampshire' என்ற Collection ல் இருந்து எடுக்கப்பட்ட பாடலாகும்.

*குறிப்பு:* நான் (M.A. English Literature) என்பதால், மேலே உள்ள கருத்துக்களை கூறியுள்ளேன். இதில் தங்களை நான் குறைகூறுவதாக தயவு செய்து நினைத்து கொள்ள வேண்டாம். தாங்கள் ஹாட்லைனில் கூறியுள்ள (வரிகள்) **"And Miles to go before I sleep"** என்ற வரிகள் Robert Frost ன் பாடல்களிலேயே மிகச்சிறந்த ஆழமான அர்த்தமுடைய வரிகளாகும்.

நன்றி!

இப்படிக்கு,
**N. P. சிங்காரவேலு.**

**ஆசிரியர் பதில்**

'Miles to go' என்பதற்குப் பதிலாக
'Miles to so' என்று வந்தது அச்சுப் பிழை! மற்றபடிக்கு ஹி! ஹி! ஹி! தான் பதில்!

அன்புடன்,
**S. விஜயன்.**

# "மாதம் ஒரு முகவர்"



இவர் நமது வாசக-விற்பனையாளர்!

| | | |
|---|---|---|
| பெயர் | : | அல். துரைசிங் பாக்யராஜ், வயது : 21 |
| முகவரி | : | நியூபார்மட்,<br>1, வீரபிள்ளை குறுக்குத்தெரு, பெங்களூரா - 560 042. |
| சொந்தமாக புத்தகக கடை உள்ளதா? அல்லது கடைகளில் விநியோகம் செய்வது மட்டும்தானா? | : | இல்லை, கடைகளில் விநியோகம் மட்டுமே! |
| லயன்/முத்து காமிக்ஸ் விற்பனையாளராக இருப்பது எவ்வளவு காலமாய்? | : | கடந்த ஒரு வருடகாலமாய் |
| இதர ஏஜென்சிகள் எந்தெந்தப் பத்திரிகைகளுக்கு? | : | இதர பத்திரிக்கைகளுக்கு முயற்சி செய்து கொண்டிருக்கிறேன்! |
| லயன்/முத்து காமிக்ஸ் இதழ்களில் நிறைகள் என்று நீங்கள் நினைப்பது என்ன? | : | அழகான சித்திரங்கள், தெளிவான கதை, உணர்ச்சிகரமான, யதார்த்தமான வசனங்கள்,<br>உயிரோட்டமான கதாபாத்திரங்கள். |
| குறைகள்? | : | அட்டைப்படத்தில் போதிய கவனம் இன்னும் தேவை. |
| விற்பனை உயர்விற்கு என்ன பண்ணலாம்? | : | பண்டிகை தினங்களில் இதழ்களை கொண்டு வருதல், கட்டுக்கோப்பான் விலை, அப்புறம் பாருங்கள் விற்பனையை! |

# லயன் வாசகர் வட்டம்!



பெயர் : பாரதி நந்தீஸ்வரன்

பிறந்த தேதி : 30.12.1965

படிப்பு : பத்து. அனுபவம் ஆயிரம்.

முகவரி : S/o. காமாட்சியம்மாள், திருவள்ளுவர் நகர், குமாரபாளையம் (PO) இராஜாஜி (DT) 638 183.

பெரிய, பெரிய ஆசை: FIRST BLOOD ஐ லயனில் காமிக்ஸ் ஆக வெளியிட விஜயன் சார் அனுமதி தரவேண்டும். XIII ஐ T.V. சீரியலாக எடுக்க வேண்டும். மழைக் காலத்தை திரைப்படமாக்க வேண்டும். சில்வெஸ்டர் ஸ்டாலோனை ஒருமுறை சந்திக்க வேண்டும். "THATS ALL"



பெயர் : ஸ்ரீமதி ரங்கநாயகி

வயது : 21 (போட்டோவில் பதினெட்டு)

பிறந்த தேதி : 22.4.1975

முகவரி : D/o காமாட்சியம்மாள், திருவள்ளுவர் நகர், குமாரபாளையம் (PO) (இராஜாஜி) சேலம் (Dt) Pin:638 183.

கருத்து: அண்ணா பாரதி நந்தீஸ்வரனால் காமிக்ஸ் அறிமுகம், அதில் ஈடுபாடு, இசை கேட்பது, ஓவியம் வரைவது. (பிரசுரமாகாத) சிறுகதை எழுதுவது. அண்ணாவோடு சிறந்த ஆங்கிலப் படங்கள் பற்றி பேசுவது ; இரத்தப்படலம் போன்ற உணர்வுப் பூர்வமான கதைகள் பற்றி விவாதிப்பது. உலகம் முழுவதும் சுற்றிப் பார்க்கும் ஆசிரியர் விஜயன் சாரைப் பார்த்து பொறாமைப்படுவது!

# "மாதம் ஒரு வாசகர்"



| | | |
|---|---|---|
| வாசகர் பெயர் | : | S. தெட்சி வயது : 23 |
| முகவரி | : | S. தெட்சி,<br>13, E. B. காலனி,<br>பவித்திரமாணிக்கம்,<br>திருவாரூர் - 610 051. |
| கல்வித் தகுதி | : | D. Pharm |
| பொழுது போக்குகள் | : | புத்தகங்களை படித்தல், படித்து முடித்த உடன் கடிதங்கள் எழுதுதல். மேலும் பத்திரிகைகளுக்கு கதை, கவிதை ஜோக்குகளை எழுதுவது. |
| லயன் காமிக்ஸ் படிப்பது எத்தனை காலமாய் ? | : | பத்து வருடமாய்; இன்றும், பிறகு என்றும் தொடரும். |
| லயன் காமிக்ஸ் அறிமுகமானது எப்படி ? | : | முத்து காமிக்ஸ் மூலமாக |
| நீங்கள் படிக்கும் இதர பத்திரிகைகள் ? | : | முத்து காமிக்ஸ் விகடன் குரூப் மற்றும் குமுதம், உல்லாச ஊஞ்சல், உங்கள் ஜீனியர், க்ரைம் நாவல். |
| இதுவரை வந்த கதைகளில் பிடித்தது ? | : | ஜான் மாஸ்டர் கதைகள், சதுரங்க வெறியன் டாக்டர் டக்கர், எத்தனுக்கு எத்தன், பாதாளப் போராட்டம், மற்றும் டெக்ஸ்வில்லர், ஆர்ச்சி, கேப்டன் பிரின்ஸ், ஜானி, வால்ட் டிஸ்னி கதைகள். |
| உங்களை தவிர வீட்டில் யாரும் படிக்கிறார்களா? | : | தம்பி கருணா |
| படித்து முடித்த பின் இதழை என்ன செய்வீர்கள்? | : | பத்திரமாக பாதுகாத்து வருகிறேன். |
| தற்போதைய ஆசை | : | லயன் காமிக்ஸை மாதம் இரண்டாக்கி மறந்துபோன கதாநாயகர்களான ஸ்பைடர் ஆர்ச்சி ரிப்போர்ட்டர் ஜானி, ஜான் மாஸ்டர் டேஞ்சர் டயபாலிக், வால்ட் டிஸ்னி கதைகள் அடிக்கடி வெளியிட வேண்டும். |
| வெறுப்பது | : | கடந்த பத்து வருடமாய் தாமதத்திற்கு சொல்லி வரும் நொண்டிச்சாக்குகள். |

## 1996 - லயனின் Performance எப்படி?

வாசகர்களே,

1996-ல் வெளிவந்த நமது லயன் வெளியீடுகள் பத்து மட்டுமே!

| | | |
|---|---|---|
| 1. மியாவ்... மியாவ்... மரணம் | - | ஜனவரி '96 |
| 2. ஆவியின் பாதையில் | - | பிப்ரவரி '96 |
| 3. மரண முள் (கோடை மலர்) | - | ஏப்ரல் '96 |
| 4. மேடையில் ஒரு மன்மதன் | - | மே '96 |
| 5. இரத்தப் படலம் - VI (ஆண்டு மலர்) | - | ஜூலை '96 |
| 6. கம்ப்யூட்டர் கொலைகள் | - | ஆகஸ்ட் '96 |
| 7. புலி வருது | - | செப்டம்பர் '96 |
| 8. மேகக் கோட்டை மர்மம் | - | அக்டோபர் '96 |
| 9. நள்ளிரவு வேட்டை (தீபாவளி மலர்) | - | நவம்பர் '96 |
| 10. பூமிக்கொரு ப்ளாக்மெயில்! | - | டிசம்பர் '96 |

மார்ச் மாதத்திலும், ஜுன் மாதத்திலும் 2 இதழ்கள் வெளியிட இயலாமல் போனதில் உங்களைப் போலவே எனக்கும் ஏகப்பட்ட disappointment! இந்த ஆண்டில் நிறையவே வெளிநாட்டுப் பயணம் மேற்கொள்ள வேண்டியிருந்ததால் இந்த மாதிரியான குளறுபடி! நிச்சயம் இது போன்ற அனுபவம் 1997ல் தொடராது என்று உறுதியாக சொல்லுகிறேன்!

1996-ல் வந்துள்ள 10 வெளியீடுகளை ஹீரோ - wise பார்த்தால்-



மாடஸ்டி - (3)
டெக்ஸ் வில்லர் - (2)
லக்கி லூக் - (1)
XIII - (1)
டிடெக்டிவ் சார்லி - (1)
ரிப் கிர்பி - (1)
மின்னல் படை - (1)

என்ற break - up கிடைக்கிறது! So - இந்த ஆண்டின் busiest ஹீரோ (யின்) மாடஸ்டி தான்! ஆக்ஷனும்; யதார்த்தமும் நிறைந்த மாடஸ்டி கதைகளுக்கு கூடுதலாக சான்ஸ் கொடுத்ததில் யாருக்கும் வருத்தமிருக்காது என்று நினைக்கிறேன்.....!

அதே போல - நமது சூப்பர் கௌ-பாய் இந்த ஆண்டு இரு பெரிய சாகஸக் கதைகளோடு உங்களை சந்தித்துள்ளார்! இது நிச்சயம் நல்ல நியூஸ் தானே...?

மற்றபடிக்கு லக்கி லூக்; XIII போன்றோர் வழக்கம் போல் வருடத்தில் ஒரு முறை தலையைக் காட்டி வருகிறார்கள்!

1997-ல் யாருக்கு முக்கியத்துவம் கொடுப்பது - யாருக்கு கல்தா கொடுப்பது என்பது பற்றிய உங்கள் யோசனைகள் - எனக்கு அவசரமாய் அவசியப்படுகிறது! So - கீழ்கண்ட படிவத்தைப் பூர்த்தி செய்து அனுப்புவதோடு - உங்களின் பொதுவான எண்ணங்களையும் எழுதி அனுப்பிட வேண்டுகிறேன்! உங்கள் யோசனைகள்; கருத்துக்களுக்கு நிஜமாகவே weight தரப்படும்! So - தவறாமல் இந்தப் படிவத்தை நிரப்பி அனுப்புங்களேன்!



அன்புடன்,
S. விஜயன்.

லயன் காமிக்ஸ்



# லயன் - 1996

1. இந்த வருடத்தின் Top இதழ்? : ____________

2. இந்த வருடத்தின் சூப்பர் சொதப்பல்? : ____________

3. இந்த வருடத்தின் best அட்டைப்படம்?: ____________

4. மிக மட்டமான அட்டைப்படம்? : ____________

5. இந்த வருட Performance - ன் அடிப்படையில் எந்தப் பகுதிகளுக்கு எவ்வளவு மார்குகள்? :
   - ஹாட் - லைன்..... [ ]
   - சித்திரத்தொடர் கதை..... [ ]
   - மாதம் ஒரு முகவர்..... [ ]
   - வாசகர் ஸ்பாட்-லைட்..... [ ]
   - வாசகர் ஹாட்-லைன்..... [ ]
   - வாசகர் வட்டம்..... [ ]

6. தற்சமய புக் சைஸ் எப்படி? : ____________

7. விலை பற்றிய உங்கள் Comments? : ____________

8. தாமதம் தவிர - குறைகள் என்ன: பார்க்கிறீர்கள் லயனில்? ____________

9. உங்கள் அபிமான ஹீரோக்களை வரிசைப்படுத்துங்களேன்! :
   1) ____________
   2) ____________
   3) ____________
   4) ____________

10. புதிதாக என்ன செய்யலாம்? : ____________

உங்கள் முகவரி ------------------------------------




**மு. ஹ. மொய்தீன்,** சென்னை-14

இருபக்க வண்ண அட்டை அமர்க்களம். முதல் பாதியில் one man army-யாக டெக்ஸ்வில்லர் தூள் கிளப்பினார் என்றால், பின்பாதியில் அவர் கமான்ஷேக்களுடன் சேர்ந்து எதிரியை வீழ்த்துவது சூப்பர்! அதுசரி, டெக்ஸ் வில்லரின் வலதுகை கார்வின் மற்றும் கிட் எங்கே ஆளையே காணோம்?

**மா. வசந்தகுமார்,** சேலம்-30.

கதை சுமாரானது. அதை சொன்ன விதமும், கதை விறுவிறுப்பாக சென்றதும் பாராட்டுக்குரியன! வாசகர் காணிக்கை ராஜுக்கு என் பாராட்டுக்களே காணிக்கை

**M. ஜோசப்,** திருப்பூர்.

''கடுகு சிறுத்தாலும் காரம் குறையாது'' என்பது போல கேப்டன் பிரின்ஸ் கதை சிறியது என்றாலும் மிகவும் அருமையாக இருந்தது.

**B. தனபால்,** சேலம்-11

தீபாவளி வெளியீடான நள்ளிரவு வேட்டை சூப்பர். அட்டையின் தரமும் அட்டைப் படமும் அருமையாக இருந்தது. கதை அதிகமான ஆக்ஷனோடு அருமையாக இருந்தது. உண்மையில் 'டெக்ஸ் - வில்லர்களுக்கெல்லாம் 'வில்லர்' தான், என்பதை நிருபித்து விட்டார்.

அப்புறம் புத்தாண்டில் லக்கி லூக்கின் ''ஒரு கோச் வண்டியின் கதை'' வருவதாக அறிவித்துள்ளீர்கள் புத்தாண்டை மகிழ்ச்சியோடு ஆரம்பிக்க இதுதான் சரியான ஐடியாவாக இருக்கும். விலை எவ்வளவானாலும் பரவாயில்லை முழுவண்ணத்தில் இருக்க வேண்டும்.

**பா. சுந்தர பாண்டியன்,** பேரையூர்.

தீபாவளிக்கு ஏற்ற கதையாக 'நள்ளிரவு வேட்டை'யை தேர்ந்தெடுத்துள்ளீர்கள் மகிழ்ச்சி! கதை மிக அருமையாக இருந்தது, அட்டைப்படம் உட்பட! டெக்ஸின் துப்பாக்கியின் உறுமல் என்னைக் கவர்ந்தது!

**K. பரணிதரன்,** சேலம்.

லயன் தீபாவளி மலர் கண்டேன்! அதில் மினிலயனை மீண்டும் கொண்டு வரலாமா என்று கேட்டிருந்தீர்கள். என்ன கேள்வி இது? ஜனவரி மாதத்தில் இருந்து உடனே மினிலயனை கொண்டு வருகிறீர்கள்.

**Dr. D. Balasubramanian, M.B.B.S.** SIVAKASI.

மின்னல் படையினர் சாகசம் = 70% நல்ல விறுவிறுப்பான கதை + படம்

கேப்டன் பிரின்ஸ் கதை = 90% சிறிய கதை என்று கூற முடியாது. அவ்வளவு அருமையான கருத்துச் செறிவு. வித்தியாசமான கதை + படம். நல்ல தேர்வு. இது போன்ற கதைகளே லயன் காமிக்ஸ்-ன் தரத்தினை உயர்த்தும்.

**P. வெங்கடேசன்,** பாண்டி-4.

நள்ளிரவு வேட்டை படங்களின் அளவைக் குறைத்து அதிக படங்களை 178 பக்கங்களில் வெளியிட்டது கண்டு எனக்கு ரொம்ப மகிழ்ச்சியாக இருந்தது. இந்த கதைக்கு விலை. 20/- கொடுக்கலாம்! இந்த தீபாவளி மலரில் வாசகர் ச. காணிக்கை ராஜ் வரைந்த ஓவியத்தை பார்த்ததும் இது வெளிநாட்டு படங்கள் என்று நினைத்து விட்டேன்! படங்கள் அவ்வளவு நன்றாக இருந்தது.

**K. Baranitharan, (Ele.,)** Chidambaram T.K.

'நள்ளிரவு வேட்டை' படித்தேன். போன முறை 'பலி கேட்ட புலிகள்' (பாலைவன பரலோகம்)-ல் கதை அருமையாக இருந்தாலும் எங்கள் சூப்பர் ஸ்டார் டெக்ஸ்-ன் அதிரடி சண்டைகள் இல்லாததால் எங்களுக்கு சின்ன மனக்குறையே. ஆனால் அதற்கு பதில் சொல்வது போல் 'நள்ளிரவு வேட்டையில்' ஒரு கலக்கு கலக்கிவிட்டார் எங்கள் ஸ்டார்.


லயன் காமிக்ஸ்
விரைவில் வருகிறது...!
மரண நடை!
டெக்ஸ் வில்லரின் 50 பக்க சாகஸம்!
ரூ.5/-